**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - 2024**

-------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (“அதிகாரசபை”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்கு உரிய தகவல்களுக்குரிய குறிப்புகள் உள்ளடக்கப்பட்ட 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் பாதகமாக உள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை கருத்திற் கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியயம் 01 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் அவை தொடர்புடைய காலப்பகுதியினுள் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்படல் மற்றும் அறிக்கையிட வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டிற்குரிய 2024 சனவரி 08 ஆந் திகதி அரச வங்கியொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 5.97 மில்லியனான அபராதம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் மிகை அப் பெறுமதியினால் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், மேற்படி நியமத்தின் 107 (ஊ) பந்திக்கு அமைவாக இந்த அபராதம் செலுத்தல் தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொது திறைச்சேரியிடமிருந்து உரிய கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் இந்த அபராதம் செலுத்த நேரிட்டதுடன் அபராதத் தொகையை அறவிட வேண்டாம் என்று வங்கி நிர்வாகத்துடன் தொடர்ந்து கலந்துரையாடியதால், அது 2023 ஆம் ஆண்டின் செலவாக கணக்கிடப்பட்டிராததுடன் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததால், 2024 ஆம் ஆண்டில் அந்த அபராதத் தொகையைச் செலுத்த நேரிட்டது. | குறித்த கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) சான்றுறுதியளிக்க வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் ஊடாக இது சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையினால், பொது திறைச்சேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 581,000 மில்லியன் தொகையான கடன் எல்லை மற்றும் திறைச்சேரியினால் வழங்கப்பட்ட ஆறுதல் கடித்தின் (letter of comfort) கீழ் அதிகார சபையின் நிலையான வைப்புக்கள் பிணையாக வைக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையில் மீளாய்வாண்டு இறுதியில் 05 தேசிய வணிக வங்கிகளுக்கு செலுத்துவதற்கான ரூபா 233,054 மில்லியன் கடன் மற்றும் ரூபா 88,515 மில்லியன் ஆன கடனீட்டு பத்திர மீதி தொடர்பான அட்டவணை தயாரித்தல் மற்றும் மேற்படி கடன் பெறுவனவுகள் பயன்படுத்தப்பட்ட முறைமை, அக் கடன் முதலீடு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் | 2021 ஆம் ஆண்டில் கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டதுடன் கடன் பத்திரங்களை வெளியிடுவது தொடர்பான நிர்மாணிக்கப்பட்ட வீதிகளின் வகைப்படுத்தப்பட்ட பட்டியல் 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 2.6, a மற்றும் b ஆம் இலக்க கணக்கீட்டு கொள்கையில் கடன் பெறும் செலவினங்களை மூலதனமாக்கும் முறைமை வெளியிடப்பட்டுள்ளதுடன், 04 இன் 18, 19, 20, 31, 32, 33 ஆம் நியமங்கள் பிரகாரம் கடன் பெறும் செலவினங்கள் சொத்தின் செலவின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் 36 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த சொத்து பயன்பாட்டிலுள்ள போது | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழ் உள்ள முறைமை மீளாய்வின் போது இது குறித்து விசேட கவனம் செலுத்தி பொறுப்புக்களைத் தீர்மானித்து, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கி மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளப்பட்ட மூலம் திகதி, கடன் தொகை, ஒவ்வொரு வீதிகளுக்குமான மூலதனமாக்கப்பட்ட கடன் கிரயம், உத்தரவாதம், சலுகை காலம், திருப்பிச் செலுத்தும் காலம், கடன் மீள்கட்டமைப்பு, கடன் தவணை கொடுப்பனவுகள், வட்டி செலுத்துதல்கள் போன்ற தகவல்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 15 மற்றும் 16 பிரிவுகள் மற்றும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 04 இன் 18, 19, 20, 31, 32, 33, 34, 36, மற்றும் 40 பந்திகளுக்கு அமைவாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. நீங்கள் கோரியபடி, கடன்கள் தொடர்பான ஆவணங்கள் நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 16 (ஆ) பந்தியின் பிரகாரம் சட்டரீதியான அதிகாரிகளினால் நிறுவப்பட்டுள்ள நிதி எல்லைகளுடனான, சட்டரீதியான மற்றும் ஒப்பந்தத் தேவைகளுக்கு அமைவாக வளங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டனவா அல்லது பயன்படுத்தப்பட்டனவா என்று நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும், வீதி பராமரிப்பிற்காக வரிசை அமைச்சினால் மீளாய்வாண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 20,749 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 84.6 மில்லியன் வெளி நிறுவனமொன்றினால் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பணம் வைப்பு செய்யப்பட்டிருந்த 43 வீதிகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், அத் தொகை வரிசை அமைச்சிற்கு மீள்நிரப்பு செய்யப்பட வேண்டிய தொகையாக கணக்கிடப்படாது சேவை பெறுநர் வருமானமொன்றாக கணக்கிடப்பட்டிருந்தமயின் காரணத்தினால் மீளாய்வாண்டின் மிகையானது மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. | குறித்த பெறுமதி சேவைபெறுநரின் வருமானமாக கணக்கிடக்கப்படாமையினால் ள்ளப்படாததால், சேவைபெறுநரின் வைப்புப் பெறுமதி அதிகமாகக் காட்டப்படவில்லை. | வருமானம் சரியாக கணக்கிடப்பட வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் ஊடாக தவறுகள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிரந்தர விடயப் பரப்பிற்கு உள்ளடக்கப்படாத 100,000 கிலோ மீட்டரிலான மாற்று வீதி மறுசீரமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் கிராம வீதிகள் அபிவிருத்திக்காக வரிசை அமைச்சின் ஊடாக அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியேற்பாடு மற்றும் அதற்குரிய செலவினம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 15 மற்றும் 16 ஆம் பந்திகளுக்கு அமைவாக தனியே செயற்திட்ட கணக்கில் குறிப்பிடப்படாது அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களினுள் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் சொத்துக்கள் முறையே ரூபா 25,537.47 மில்லியனான மற்றும் ரூபா 155,703.94 மில்லியன் அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது. | அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 2020 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியயே தெக்ம அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், அதிகாரசபையின் விடயப்பரப்புக்குள் அடங்காத வீதிகளை நிர்மாணிக்கவும் அபிவிருத்தி செய்யவும் நேரிட்டது. அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, தற்போது சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றதுடன், அந்த நிதி நேரடியாக குறித்த அமைச்சுக்களினால் அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டு, அதன் பின்னர் அதிகாரசபை ஊடாகவே குறித்த திட்டத்திற்கு நிதி வழங்கப்பட்டு வருகின்றது. | வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களினுள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 49 ஆம் பந்திக்கு முரணாக, மீளாய்வாண்டில் அதிவேக வீதி அமைப்பின் ஊடாக ஈட்டப்பட்ட ரூபா 12,766.5 மில்லியன் வருமானம் மற்றும் ரூபா 7,534.85 மில்லியன் செயற்பாட்டு செலவினம் தனித் தனியே கணக்கிடப்படாது தேறிய வருமானமான ரூபா 5,231.66 மில்லியன் மட்டும் நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினம் அப் பெறுமதியினால் குறைவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | கடந்த கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் அதிவேக வீதி அமைப்பின் தேறிய வருமானம் ஒரு தனிப் பிரிவாகச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டதாலும், நியமம் 17 இன் 66 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிவேக வீதி அமைப்பை ஒரு தனிப் பிரிவாகக் கருதி, அதன் வருமானங்களையும் செலவுகளையும் ஈடு செய்து, இலாபத்தை மாத்திரம் வருமானக் கூற்றில் 2021 ஆம் ஆண்டு முதல் சீராக்கப்பட்டுள்ளது. | வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களினுள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2020 பெப்வரி 05 ஆந் திகதிய அமப/20/0313/204/029 மற்றும் 2020 யூன் 24 ஆந் திகதிய அமப/20/0974/204/029 –VI ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் கடன் தொகைகளுக்குரிய வட்டி செலவினம் மற்றும் ஏனைய செலவினங்கள் தீர்ப்பதற்காக | SLPSAS 11 இன் பிரகாரம் மானியங்கள் பெறுவனவு கணக்கிடப்படல் தொடர்பாக ஒரு சிக்கல் நிலைமை எழுவதால், அரசாங்கத்தின் உரிமை பங்களிப்பாக கணக்கிடப்படல் தொடர்பாக பொது திறைச்சேரி மற்றும் வரிசை அமைச்சிடமிருந்து | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழ் உள்ள முறைமை மீளாய்வின் போது, பிறழ் நிதி அறிக்கையிடலைத் தடுக்கும் வகையில் விசேட கவனம் செலுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | உரித்து பங்களிப்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு அத் தீர்மானத்திற்கு மற்றும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 16 ஆம் பந்திக்கு முரணாக தேசிய வங்கி கடன் வட்டி மற்றும் தவணை கொடுப்பனவிற்காக வரிசை அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் ஊடாக மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 48,195 மில்லியன் மற்றும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 137,271.96 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 185,466.96 மில்லியன் மூலதன அளிப்பாக (Capital contribution) வருடாந்த வருமானத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் மற்றும் கடந்த ஆண்டின் மிகை முறையே ரூபா 48,195 மில்லியன் மற்றும் ரூபா 137,271.96 மில்லியனினால் அதிகமாகவும் உரித்து பங்களிப்பு அப் பெறுமதியினால் குறைவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்று எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்களைத் தீர்மானித்து, உள்ளகக் கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கி மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் ஊடாக அறிக்கைகள் மூலம் தேவையான சீர் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் அந்நிய செலாவணி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களினால் எய்தப்பெற்றிராத இலாபம் மற்றும் நட்டத் தொகை காலப்பகுதியின் ஆரம்ப மற்றும் இறுதி காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் இணக்கத்தின் கீழ் காசுப் பய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய ரூபா 358 மில்லியனான அந்நிய செலாவணி இலாபம் மீளாய்வாண்டின் மிகைக்கு மேற்கொள்ளப்படுகின்ற சீராக்கலின் கீழ் ரூபா 375.8 மில்லியனாக குறைக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் ரூபா 17.72 மில்லியன் | நியமம் 02 இன் 39 பிரிவின்படி, நாணய மாற்று வீத வேறுபாடுகளின் விளைவான தாக்கம் காலப்பகுதியின் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக காசுப்பாய்ச்சல் அறிக்கையில் பதிவு செய்யப்படுவதுடன், அது செயற்பாட்டு, முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளிலிருந்து ஏற்படும் காசுப் பாய்ச்சல்களிலிருந்து வேறுபடுத்திச் சமர்ப்பிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், குறித்த சீராக்கலை மேற்கொள்வதற்கு பொருத்தமான இடம் மிகைக்கு ஏற்படும் தாக்கத்தின் கீழானதாகும், எனவே அவ்வாறு சீராக்கப்பட்டுள்ளதுடன், | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் தாமதமின்றி பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைவாக மற்றும் ஆண்டு இறுதி காசு பெறுமதி ரூபா 358 மில்லியன் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 15 (ஆ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு முரணாக, மீளாய்வாண்டில் காசினால் ஏற்கப்பட்ட ரூபா 32.74 மில்லியன் நடைமுறையிலுள்ள வேலைகள் பெறுமதி மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 6,691.56 மில்லியனான ஆதனம் பொறி உபகரணங்களின் பெறுமதி நிதியளிக்கப்பட்ட மூலங்கள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படாமையின் காரணத்தினால் மேற்படி செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்சலில் ஏற்பட்ட வேறுபாடுகள் உறுதி செய்யப்பட முடியாதிருந்தது. | அவ்வாறு இல்லாவிட்டால் காலப்பகுதியின் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் சீராக்கும் போது காசு மற்றும் வங்கியுடன் இணங்காது என அறியத்தருகின்றேன். அத்துடன், நடைமுறையிலுள்ள வேலைகள் (அட்டவணை இல. 193 முதல் 226 வரை), அதிகாரசபையின் நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி (அட்டவணை இல. 453 A), உள்நாட்டு நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி (அட்டவணை இல. 453 C) பற்றிய விபரங்கள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 04 இன் 19 ஆம் பந்திக்கு அமைவாக, தகுதிவாய்ந்த சொத்தொன்று கையகப்படுத்தல், நிர்மாணிக்கப்படல் அல்லது உற்பத்தி செய்வதற்காக நேரடியே காரணமாகின்ற கடன் செலவுகள் அச் சொத்தின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் வணிக வங்கிகளினால் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டு மத்திய அதிவேக வீதி I மற்றும் III பகுதிகள் உப செயற்திட்டங்கள் 02 இற்கு முறையே பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 38,260 மில்லியன் மற்றும் ரூபா 8,738.66 மில்லியன் கடன் தொகைக்குரியதாக 2024 ஆம் ஆண்டினுள் ஏற்கப்பட்ட ரூபா 5,918 மில்லியன் உள்ளடங்கலாக மீளாய்வாண்டு இறுதியில் ஏற்கப்பட்டிருந்த ரூபா 33,631 மில்லியன் கடன் செலவினம், அதிகார சபையினால் செயற்திட்டத்திற்கு பெற்றுக் | உரிய கடன்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் பெறப்பட்டுள்ளதுடன் அதற்கான கடன் தவணைகள் மற்றும் வட்டியைச் செலுத்துவதற்கு திறைசேரியினால் தேவையான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. குறித்த செயற்திட்டங்களுக்கு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கடன்கள் மூலதனப் பங்களிப்புக்களாகப் பதிவுசெய்யப்படுமாயின், கடன் தொகையானது அதிகாரசபையின் கணக்குகளில் காண்பிக்கப்படுவதால், கடன் தொகையின் குறைவை செயற்திட்டக் கணக்கு அறிக்கைகளில் காண்பிக்க முடியாது. அதற்கமைய, அதிவேக நெடுஞ்சாலை மூலதனமாக்கப்படும் வரை,நியமம் 04 இன் 11 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறையிலுள்ள வேலைகளின் பெறுமதிக்கு கடன் பெறுவனவு கிரயம் | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் கடன் பெறுவனவு செலவு கணக்கிடப்பட வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்பட்ட மூலதன பங்களிப்பாக குறிக்கப்படாது நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தமையின் காரணத்தினால், மீளாய்வாண்டு இறுதியில் அப் பெறுமதியினால் நடைமுறையிலுள்ள பெறுமதி அதிகமாகவும், செயற்திட்டத்திற்கான மூலதன பங்களிப்பு பெறுமதி குறைவாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மேற்படி நியமத்தின் 40 (இ) பந்தியின் பிரகாரம் மூலதனமாக்கப்படலுக்காக தகுதிவாய்ந்த கடன் செலவினம் நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மூலதனமாக்கல் விகிதம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அரச பிரிவினாலும் அது தொடர்பில் உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியயம் 04 இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம், நீட்டிக்கப்பட்ட காலப்பகுதியினுள், செயல் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றின் போது கடன் செலவினம் மூலதனமாக்கப்படல் இடைநிறுத்தப்பட வேண்டிய போதிலும், இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த ரூவண்புர அதிவேக வீதி செயற்திட்டம் மற்றும் மத்திய அதிவேக வீதி I ஆம் பகுதி செயற்திட்டத்திற்குரிய மீளாய்வாண்டில் ஏற்கப்பட்ட ரூபா 4,839.29 மில்லியன் கடன் செலவினம் காலப்பகுதியின் செலவினமாக அடையாளப்படுத்தாது, நடைமுறையிலுள்ள வேலையாக கணக்கிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக் கூற்றில் நடைமுறையிலுள்ள வேலை பெறுமதி மற்றும் மிகை அப் பெறுமதியினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. | 04 இன் 35 ஆம் நியமத்தின் பிரகாரம், "ஒரு சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டிற்கு அவசியமான தற்காலிக தாமதத்தின் போது, கடன் பெறும் செலவுகளை மூலதனமாக்குவது இடைநிறுத்தப்படாது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நியமத்தின் 19 ஆம் பிரிவில், ஒரு சொத்தை கையகப்படுத்துவதற்கு நேரடியாகக் காரணமாக அமையும் கடன் பெறுவனவு செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டும் என்றும், ஏனைய கடன் பெறுவனவு செலவுகள் செலவினமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. | கடன் பெறுவனவு செலவு நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்கிடப்பட வேண்டியதுடன் எதிர்வரும் நிதிக் கூற்றுக்கள் ஊடாக தேவையான சீர்செய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்நியின் பிரகாரம் சொத்தாக இனங்காணப்பட வேண்டிய, அதிகார சபையினால் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து | கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், உரிய மதிப்பீட்டுப் | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டியதுடன் பொதுத்துறைக் கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்களும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிராததுடன் மேற்படி நியமத்தின் 51 ஆம் பிரிவிற்கு முரணாக 1134 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 11,840.02 மில்லியனாக கணக்கிடப்பட்டிருந்த போது, 789 கட்டிடங்கள் மட்டும் 2019 ஆம் ஆண்டில் மீள்மதிப்பிடப்படுவதற்கு இனங்காணப்பட்டு அதில் 561 கட்டிடங்கள் மட்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மதிப்பிடப்பட்ட கட்டிடங்களின் இட அமைவு, அளவு, உரித்தின் தன்மை, மதிப்பிடப்பட்ட திகதி, நிகழ்கால பயன்பாடு போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லலை. | பெறுமதிகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. நிலையான சொத்துப் பதிவேட்டில் மதிப்பீட்டுப் பெறுமதி, மதிப்பீடு செய்யப்பட்ட திகதி மற்றும் நிகழ்கால பயன்பாடு என்பன குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கட்டிடங்களின் இட அமைவு, அளவு மற்றும் உரிமைத் தன்மை என்பவற்றை உள்ளடக்கி அவை நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமம் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு அல்லது கணக்கிடப்படுதல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஓ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 50 ஆம் பிரிவிற்கு முரணாக நிதிக் கூற்றில் வீதி சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 381,641 மில்லியன் பெறுமதியினுள் முறையே ரூபா 214.74 மில்லியன் மற்றும் ரூபா 1,328.34 மில்லியனான காணிகள் மற்றும் பாலங்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அதற்கு சமனான பெறுமதியில் வீதி சொத்துக்கள் மிகையாக கணிக்கப்பட்டு காணிகள் மற்றும் பாலங்கள் சொத்துக்கள் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. மேலும், தொடர்புடைய காணிகள் மற்றும் பாலங்கள் சொத்துக்களாக தேய்வு செய்யப்பட்டிருந்தமையின் காரணத்தினால் தேய்வு செலவினம் ரூபா 103.72 மில்லியன் அதிகமாக மற்றும் தொடர்புடைய சொத்துக்கள் பெறுமதி குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ரூபா 1,328.34 மில்லியன் வீதிச் சொத்திற்கு தொடர்பானதுடன், பொதுக் குறிப்பு இலக்கம் 10 இல் காணிப் பெறுமதியாக அதனைக் காட்டுதல் கணினிமயமாக்கலின் போது ஏற்பட்ட பிழையாவதுடன் அது திருத்தப்பட்டுள்ளது. அதன்படி, அது தொடர்பான தேய்மானக் கணக்கீடு சரியானதுடன், வீதிகளின் கீழ் ரூபா 92.983 மில்லியன் தேய்மானச் செலவு மிகையாகக் கணக்கிடப்படாததுடன் காணிச் சொத்து குறைவாகக் கணக்கிடப்படவில்லை. ரூபா 214.748 மில்லியனுக்கான சீர்திருத்தம் 2025 ஆம் ஆண்டில் நாளேட்டு இலக்கம் 160/J05 ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களினுள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 58 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகமொன்று ஆதனம், பொறி | வீதிச் சொத்து முகாமைத்துவப் பிரிவின் ஊடாக வீதி சொத்துக்கள் மதிப்பீடு முறைமை (SLRAMS) மூலம் | கணக்கீட்டு கொள்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேய்மான விகிதங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உபகரணங்கள் உறுப்படிகளுக்காக ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட பெறுமதி அதன் முக்கியமான பகுதிகளுக்கு வேறுபடுத்தி தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையின் மொத்த சொத்துக்களின் 82 சதவீதமான அதாவது ரூபா 1,140,180 மில்லியன் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிவேக வீதி கிரயம் மற்றும் 04 செயற்திட்டங்கள் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட 42 நெடுஞ்சாலைகளுக்குரிய ரூபா 71,982.01 மில்லியனான கிரயம், கால்வாய்கள், பாலங்கள், நடைபாதை, வீதி சமிஞ்சைகள் போன்ற முக்கிய பகுதிகளுக்கு வேறுப்படுத்தி தேய்வு செய்யப்படாது, 03 சதவீத பொது விகிதத்தில் தேய்வு செய்யப்பட்டிருந்தமையினால் அதிவேக மற்றும் நெடுஞ்சாலைகள் சொத்துக்கள் மற்றும் அதற்குரிய கூட்டுத்தொகை ரூபா 29,567 மில்லியனான தேய்வு செலவினம் சரியாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படுகின்றது. அந்த மதிப்பீட்டில், ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக மதிப்பீட்டு மதிப்புகளைப் பெற்று, அந்தந்த பகுதிகளுக்குரிய வெவ்வேறு தேய்மான விகிதங்களின் கீழ் தேய்மானம் கணக்கிட முடியும் என்பதால், அதற்கேற்ப எதிர்காலத்தில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | பிரகாரம் சரியாக சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு தேய்மானம் செய்யப்பட வேண்டியதுடன் தேவையான சீர்செய்தல்கள் எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (க) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 87, 90 மற்றும் 92 பந்திகளுக்கு அமைவாக உரித்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான பாதுகாப்பாக உறுதியளிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மதிப்பு, கையகப்படுத்துவதற்கான ஒப்பந்த கடப்பாடுகளின் அளவு, மீள்மதிப்பு செயற்படுத்தப்படுகின்ற திகதிகள், தற்காலிகமாக செயலற்ற சொத்துக்களின் நேரிய மதிப்பு, முழுமையாக தேய்வு செய்யப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் நேரிய பெறுமதி மற்றும் செயலின் பயன்பாட்டிலிருந்து ஓய்வு பெற்று அகற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள என வகைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 87, 90 மற்றும் 92 பந்திகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்ற வெளிப்படுத்தல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்திக்கு அமைவாக சொத்தாக இனங்காணப்பட வேண்டிய, அதிகார சபைக்கு சொந்தமான மீளாய்வாண்டு இறுதியில் பயன்படுத்தப்படுகின்ற முழுமையான பெருந்தெருக்கள் அளவு மற்றும் பெறுமதி அதாவது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விடயப் பரப்பிற்கு சொந்தமான AA, AB, AC, B மற்றும் E தரத்தின் கீழ் 12,568 கி.மீ வீதிகள் காணப்படுகின்றமை அடையாளப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 29.71 சதவீதத்திற்கு சமனான 3,734 கி.மீ பெறுமதி மட்டும் ரூபா 1,140,180 மில்லியன் தொகையாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வு அறிக்கைகள் ஊடாக இந்த விடயம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய 8,834 கி.மீ வீதிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்படுவதற்கு இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலவிய நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் மூலதனமாக்க முன்மொழியப்பட்ட 2000 கி.மீ தூரத்தை மேற்கொள்ள முடியாததுடன் 2025 ஆம் ஆண்டில் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான உரிய தூரங்கள் மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆரம்ப கட்டமாக, எந்தவொரு வீதியிலும் வீதி அமைப்பு மற்றும் அடித்தளம் அதிக பெறுமதியைக் கொண்டிருப்பதால், 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 6000 கி.மீ தூரத்திற்கான வீதி அமைப்பு மற்றும் அடித்தளத்தை மதிப்பீடு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு வலுப்படுத்தல் மற்றும் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் ஊடாக சொத்துக்கள் மீதிகள் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (கி) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய நிர்மாணிப்பு பணிகள் ஆரம்பிக்கப்படாது 2022 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டிருந்த மத்திய அதிவேக வீதி - IV ஆம் பகுதி செயற்திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்டிருந்த பெறுமதி ரூபா 1,360.12 மில்லியனான காணிகள், 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 23 ஒப்பந்தங்களின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 706.94 மில்லியனான வீதிகள், போக்குவரத்து செயற்திட்டம் தயாரிப்பு வசதி செயற்திட்டத்தின் ஊடாக 2023 திசெம்பர் 31 ஆம் | இந்தத் செயற்திட்டம் 2025 யூன் மாதம் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு (அமப/25/0892/809/068 ஆம் இலக்க மற்றும் 2025.06.17 திகதிய) இணங்க மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை காணி கையகப்படுத்துவதற்காகச் செலுத்தப்பட்ட பணத்தொகை காணியின் கீழ் அடையாளங் காணப்படாமல், முடிக்கப்படாத வேலைகளின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளதால், உரிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். ஆய்வக உபகரணங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உபகரணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, மதிப்பீட்டு மதிப்புகள் பெறப்பட்டு நிதி அறிக்கைகளில் | சொத்துக்கள் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு வலுப்படுத்தல் மற்றும் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் ஊடாக சொத்துக்கள் மீதிகள் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 916.41 மில்லியனான சொத்துக்கள் மற்றும் தெற்கு அதிவேக வீதி நீடிப்பு 3 செயற்திட்டத்தின் ஊடாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 40.6 மில்லியன் பெறுமதியான ஆய்வுக்கூட உபகரணங்களும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிலையான சொத்துக்கள பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட போதிலும், பெறுமதி இனங்காணப்படாத 153 வாகனங்கள், 12,716 ஆய்வுக்கூட உபகரணங்க்ள மற்றும் 14,413 ஆய்வு மற்றும் அபிவிருத்தி உபகரணங்கள் (R & D Equipments) நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் அதிகார சபையின் பெயரில் அல்லது அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட RCDC நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிராத 71 வாகனங்கள், அதிகார சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத போதிலும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் அதிகார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முன்னர் காணப்பட்ட திணைக்கள பெயரில் பதிவு செய்யப்பட்ட 1206 வாகனங்கள் தொடர்பான நாளதுவரையாக்கப்படல்கள் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | உள்ளகப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். TPPF செயற்திட்டத்தின் கலைத்தல் கணக்குகளின் பிரகாரம், மொத்த சொத்துக்கள் ரூபா 916.42 மில்லியனில் இருந்து, வெளிநாட்டு உதவித் செயற்திட்டங்களின் நாணயமாற்று விகிதச் சீராக்கல் ரூபா 428.47 மில்லியன் ஆனது, அரச கணக்குகள் வழிகாட்டல் சுற்றறிக்கை 03/2024 இன் பிரகாரம் சரிசெய்யப்பட்டு, எஞ்சிய மதிப்பில் ரூபா 486.92 மில்லியன் பெறுமதியான மதியுரை சேவைகளுக்கான பெறுமதி 2025 சனவரி மாதம் 199/J01 ஊடாக கணக்கிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள 153 வாகனங்களில், தற்போது பயன்படுத்தப்படும் வாகனங்கள் மதிப்பீட்டு மதிப்புகளின் அடிப்படையில் கணக்குகளில் நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய வாகனங்களின் உரிமையும் உறுதிப்படுத்தப்பட்டு, மதிப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கீ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு கிரயம் மற்றும் நிகர தேறக்கூடிய பெறுமதி தேறிய ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் காட்டப்பட | இந்த இருப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கிடைத்த மானியமாவதுடன் கொள்வனவு செய்யப்பட்ட இருப்பு அல்ல. இந்தக் இருப்பு தற்போது பயன்படுத்தக்கூடிய நிலையில் | இருப்பின் கிரயம் மற்றும் நிகர தேறக்கூடிய பெறுமதி இனங்காணப்பட்டு குறைந்த பெறுமதிக்கு கணக்கிடப்படுதல் வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும், அதிகார சபையின் 03 பிரிவுகளில் இறுதியாக காணப்பட்ட இருப்பு பெறுமதி நியமத்தின் பிரகாரம் பெறுமதியிடப்படாது அதன் கிரய பெறுமதியான ரூபா 286.89 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளதா என்பதையும், மீண்டும் இருப்பு மதிப்புகளைப் பெறுவது குறித்தும் ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப உரிய சேதத்திற்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும். | தேவையான சீர்செய்தல்கள் எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிலுள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (கு) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிற்சேர்பின் கீழ் மூலதன மானியம் குறிப்பிடப்படுவதற்கு இடமளிக்கப்பட்ட மாற்று முறைமைக்கு அமையாத வண்ணம் மீளாய்வாண்டின் மீண்டெழும் மிகை கணிக்கும் போது மூலதன மானியம் ரூபா 111.521 மில்லியனும் உள்ளடக்கப்பட்டமையின் காரணத்தினால், அப் பெறுமதியினால் மீண்டெழும் மிகை மற்றும் மூலதன அளிப்பு பற்றாக்குறை மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் தற்போது பயன்படுத்தப்படுகின்ற மாதிரி தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் ஒரு தடவை இது தொடர்பாக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திடமிருந்து உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்பட்டு தேவையான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மூலதன அளிப்பு கணக்கிடப்படும் போதான தவறு சீர் செய்வதற்கு எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (கூ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 14 இன் 27, 28 மற்றும் 34 ஆம் பந்திகளின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரின் தொடர்புகள் தொடர்பாக, அதாவது பிதான முகாமைத்துவ தரப்பினரினது ஒவ்வாரு வகுப்புக்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு அவர்களின் ஊதியம், ஏனைய கொடுப்பனவுகள், நிதி அல்லா பிரதிநலன்கள் மற்றும் நபர்களின் எண்ணிக்கை, செயற்திட்ட அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள முகாமையாளர்களின் எண்ணிக்கை மற்றும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், துணை கம்பனிகளுக்கிடையேயான ஒப்பந்தங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், நிதி ஆய்வுகள் மற்றும் இரு தரப்பு உத்திரவாதங்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வெளிப்படுத்தல் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கெ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 38 ஆம் பந்தியின் அளவுகோள்களுக்கு முரணாக அதிகாரசபையினால் சேவை பெறுநர் ஒப்பந்த பணிகளுக்காக செலவில் 20 சதவீத இலாப வரம்பினை சேர்த்து மீளாய்வாண்டிற்காக ரூபா 490.97 மில்லியன் வாடிக்கையாளர் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | நியமம் இலக்கம் 16 இன் 38 ஆம் பிரிவு மற்றும் 31, 32, 34 பிரிவுகளில் கூறப்பட்டுள்ளபடி, ஒப்பந்தச் செலவு மற்றும் ஒப்பந்தக் கூடுதல் கட்டணம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் எல்லா நேரங்களிலும் ஒப்பந்தச் செலவில் 20% இலாப வரம்பு சேர்க்கப்படவில்லை என தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே 39 ஆம் பிரிவில் ஒப்பந்தச் செலவு நிறைவு கட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டால், தொடர்புடைய திகதியில் ஏற்கப்படும் செலவு அந்தச் செலவில் உள்ளடக்கப்படும் என கூறப்பட்டுள்ளதால், மேற்கூறிய பிரிவுகளின்படி அதிகாரசபை ஒப்பந்தக் கட்டணத்தைக் இனங்கண்டு கணக்கிட்டுள்ளது. | குறித்த கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சேவை பெறுநர் வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டியதுடன் அது தொடர்பாக மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்தும்) உறுதிசெய்யப்படுதல் வேண்டும். |
| (கே) | அதிகார சபையின் கணகீட்டு கொள்கை 2.1 இற்கு அமைவாக சர்வதேச பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 21 இன் 26 மற்றும் 52 பிரிவுகளுக்கு அமைவாக நிறுவகமொன்றினால் அனைத்து நிதி அறிக்கையிடல் திகதியிலும் சொத்து மதிப்பிழப்பிற்கான அறிகுறிகள் (Indication) உள்ளதா என்பதை மதிப்பிட்டு, அத்தகைய அறிகுறிகள் இருக்குமெனில், சொத்தின் மீண்டும் அறவிடப்படக்கூடிய தொகை (Recoverable Amount) கணிக்கப்பட வேண்டிய போதிலும், 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிலுவையிலுள்ள முறையே ரூபா 32,676 மில்லியன் மற்றும் ரூபா 577.28 மில்லியனான வேலை முற்பணங்கள் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் நியமத்தின் பிரகாரம் மதிப்பிழப்பு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், இந்த கடன்பட்டோர் மீதியில் தற்போது இல்லாத பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற வேண்டிய ரூபா 306.5 மில்லியன் மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அப் | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்கள் அதிகமாக இருப்பதனால், அவ்வாறு மதிப்பிழப்பு மதிப்பீடுகளை மேற்கொள்வது நடைமுறையில் கடினமான செயலாகும். ஆயினும், அதற்காக வீதிச் சொத்து முகாமைத்துவ முறைமை ஸ்தாபிக்கப்பட்டு, தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டதன் பின்னர், இந்தச் சொத்துக்களின் மதிப்பிழப்பு தொடர்பான மதிப்பீட்டைப் பெறுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழ் உள்ள முறையை மீளாய்வின் போது இது குறித்து விசேட கவனம் செலுத்தி பொறுப்புக்களைத் தீர்மானித்து, உள்ளகக் கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். வேலை முன்னேற்றக் கொடுப்பனவுகளை விடுவித்தல், அறவீடுகளை கணக்கிடும் போது ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து, தாபன விதிக் கோவையின் II ஆம் பாகத்தின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணையொன்று மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி உறுதி செய்வதற்குரிய எழுத்துமூல ஒப்பந்தம் அல்லது பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (கை) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08 இன் 22 ஆம் பந்தியின் வரைவிளக்கத்தின் பிரகாரம், வீதிகள் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக கையகப்படுத்தப்பட்ட அனைத்து காணிகளும் காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 38 (அ) பிரிவின் கீழ் கையகப்படுத்தும் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் இழப்பீடு வழங்கப்படும் திகதி வரை செலுத்தப்பட வேண்டிய 07 சதவீத வருடாந்த வட்டிக்காக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் ஊடாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.<br>மேலும், 10 அதிவேக வீதிகள் செயற்திட்டங்களுக்காக மட்டும் 43,350 காணித் துண்டுகள் கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்குரிய இழப்பீடு செலுத்தல் தொடர்பான பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படவில்லை. | வர்த்தமானி அறிவித்தல் 38 (அ) இன் படி, பிரதேச செயலகங்கள் இழப்பீடு மற்றும் வட்டியைத் தயாரித்து விண்ணப்பிக்கின்றதுடன் 2024.12.31 அன்று அந்தக் கோரிக்கைகளின்படி இழப்பீடு மற்றும் வட்டி விவரங்கள் நிதி கூற்றுக்களில் பொதுக் குறிப்புகள் எண். 01 இன் (General Notes) கீழ் வெளியிடப்பட்டுள்ளன, மேலும் செலுத்த வேண்டிய வட்டிக்கு நிதியேற்பாடுகள் ஒதுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) ஆ பிரிவின் கீழ் முறைமை மீளாய்வின் போது இழப்பீடுகள் செலுத்துதல் தொடர்பான பதிவேடுகள் பேணிச் செல்லப்படுகின்றமை தொடர்பாக செயற்திறனான உள்ளக கட்டுப்பாடு மேற்கொள்கின்றமையை சான்றுறுதிப்படுத்த வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 13 இன் 86 (அ) பந்தியின் பிரகாரம் முதலீட்டு சொத்துக்களின் பெறுமதியிடப்படுவதற்கு பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முதலீட்டுச் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையை எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் போதுமான அளவில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) அதனை சான்றுறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெற்கு அதிவேக வீதி நீடிப்பு (2 ஆம் பகுதி) செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட 12 கட்டிடங்களின் பெறுமதி அதிகார சபையினால் கணக்கிடப்படும் போது ரூபா 141.43 மில்லியன் குறைவாக காண்பிக்கப்பட்டமையின் காரணத்தினால் கட்டிடங்களின் பெறுமதி மற்றும் மூலதன மானியம் அதற்கு சமனான பெறுமதியில் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. | இந்தக் கட்டிடங்கள் 2021 ஆம் ஆண்டில் உரிய செயற்திட்டத்தினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்ட தகவல்களின்படி மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் கலைப்பு கணக்குகள் வழங்கப்பட்டதன் பின்னர் ஒப்பிட்டுப் பார்க்காததாலேயே இவ்வாறு வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அது 2025 ஆம் ஆண்டில் நாளேட்டு இலக்கம் 295/J03 ஊடாக சீர் செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பெறுமதிகள் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளமையை மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் எதிர்வரும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களில் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் 20 ஆம் பிரிவிற்கு மற்றும் தொழிலாளர் ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட்ட B/பொது உபதெஸ்/5 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 19 திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணாக அதிகார சபையினால் பணிக்கொடை கொடுப்பனவுகள் கணிக்கப்படும் போது அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்க்கை செலவு கொடுப்பனவுக்கு மேலதிகமாக, சீராக்கல் கொடுப்பனவு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொடுப்பனவு போன்ற அங்கீகரிக்கப்படாத 12 கொடுப்பனவுகள் கருத்திற் கொள்ளப்பட்டு பணிக்கொடை கணிக்கப்பட்டதன் காரணத்தினால் பணிக்கொடை ஒதுக்கட்டின் மதிப்பு ரூபா 954.34 மில்லியனினால் அதிகமாக கணக்கிடப்பட்டு மீளாய்வாண்டின் மிகை குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம், 2024 சனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் தெற்கு மாகாண அலுவலகத்திலிருந்து ஓய்வு பெற்ற 07 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிக்கொடை கொடுப்பனவானது 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் 20 ஆவது பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. ஒருங்கிணைந்த சம்பளம் என்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்படும் ஏனைய அனைத்து நிரந்தர கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இது 1986 ஆம் ஆண்டு முதல் ஒரே அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், நீண்ட காலமாக அதிகாரசபையினால் பணிக்கொடை கொடுப்பனவுகளைக் கணக்கிடும்போது ஒருங்கிணைந்த சம்பளம் என்பதற்கு உள்ளடக்கப்பட்ட சம்பளத்தை மாற்றுவதன் மூலம் ஒரு தொழில் தகராறு ஏற்பட வாய்ப்புள்ளதுடன், அது தொடர்பில் தொழிலாளர் ஆணையாளர் அலுவலகத்தில் விசாரணைகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | பணிக்கொடை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பணிக்கொடை கணக்கிடப்பட வேண்டியதுடன், மேலதிக கொடுப்பனவுகள் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். தாபன விதிக்கோவையின் II ஆம் பாகத்தின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 1.06 மில்லியன் பணிக்கொடை கொடுப்பனவுகள் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தன. | | |
| (இ) | 02/2016 ஆம் இலக்க மற்றும் 2016 ஒக்தோபர் 21 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு பதவிக்கும் சம்பள உயர்வுக்கான சதவீதம் குறைந்தபட்சம் 1% தொடக்கம் அதிகபட்சம் 2.9% வரையான வீச்சில் காணப்பட்ட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் 04 சதவீத சம்பள உயர்வு வரம்பினை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 3,600.1 மில்லியன் ஆக கணிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் 2.9 சதவீத அதிகபட்ச சம்பள உயர்வு வரம்பின் கீழ் ஒதுக்கக்கூடிய அதிகபட்ச ஒதுக்கீட்டு மதிப்பான ரூபா 3,315.33 மில்லியனை பார்க்கிலும் ரூபா 284.77 மில்லியன் அதிகமாக பணிக்கொடை ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, செலவினம் அதிகமாகக காண்பிக்கப்பட்டு மிகையானது குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளது. | சூத்திர முறையின்படி பணிக்கொடை கணித்தல் ஆரம்பத்திலிருந்தே சம்பள அதிகரிப்பு சதவீதம் 4% ஆக கணிக்கப்பட்டுள்ளது. ஆயினும், எதிர்காலத்தில் இந்த விகிதம் மீளாய்வு செய்யப்பட்டு, மிகவும் சரியான அண்ணளவான சதவீதத்திற்குக் கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படும். | பணிக்கொடை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பெறுமதிகளைச் சரியாக அடையாளங் காணப்படாமையினால் ஏற்பட்ட மிகையின் மீதான பாதிப்பு எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீர் சரிசெய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | அதிகார சபையின் அனைத்து மாகாண அலுவலகங்களுக்கும் சொந்தமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாரான காசு மீதி பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அத்திகதியிலுள்ள கையிருப்பு தொகை என பதிவு செய்யப்பட்ட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றில் நிகழ்நிலை தொகையாக ரூபா 422.95 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் மாகாண அலுவலகங்கள் மற்றும் கள அலுவலகங்களிலிருந்து | வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் உள்ள வருமானம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்புடைய நபர்களால் பெற்றுக் கொள்ளப்படாததால், ரூபா 0.67 மில்லியன் பெறுமதியான 08 காசோலைகள் மீண்டும் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அவை மீண்டும் வரிசை அமைச்சுக்குச் தீர்க்கப்பட்டவில்லை. முகப்பு வளாகங்களிலிருந்து பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள காசோலைகள், முன்கூட்டிய விற்பனையிலிருந்து பெறப்பட்ட | நிதி அறிக்கைகள் சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளமைக்கு மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) சான்றுறுதிபடுத்த வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழ் உள்ள முறைமை மீளாய்வின் போது, பிரதான அலுவலகங்களுக்கும் மாகாண அலுவலகங்களுக்கும் இடையிலான பணப் பரிமாற்றங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தி பொறுப்புக்களைத் தீர்மானித்து, உள்ளகக் |

| | | | |
|---|---|---|---|
| | பிரதான அலுவலகத்திற்கு 2025 சனவரி 03 ஆந் திகதி தொடக்கம் பெப்ரவரி 10 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் அனுப்பப்பட்ட ரூபா 311.27 மில்லியன் தொகை 2024 திசெம்பர் 31 இல் நிகழ்நிலை தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அப் பெறுமதியினால் காசு மற்றும் காசுக்கு சமனானவை பெறுமதி அதிமாக மற்றும் மாகாண அலுவலகங்களின் கையிருப்பு தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானமாவதுடன் அவை குறித்த வரிசை அமைச்சிற்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அவை மீண்டும் முகப்பு வளாகத்திற்கு அவற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும். | கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கி மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 03 துணை கம்பணிகள் தற்போது கலைக்கப்பட்டு ஒரு தனி கம்பனி தாபிப்பதற்கு அமைச்சரவையினால் கொள்கை ரீதியான தீர்மானம் பெறப்பட்டிருந்த போதிலும் குறித்த 03 கம்பனிகளால் இறுதியாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அதிகார சபையினால் தொடர்புடைய கம்பனிகளுக்கு பயன்பாட்டிற்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட கியரம் ரூபா 17.55 மில்லியனான 05 வாகனங்கள் மற்றும் கிரயம் குறிப்பிடப்படாத 39 சொத்து உறுப்படிகள் கையேற்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்த 03 கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரங்கள் தொடர்பாக பிண்ணினைப்பு 14 ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இச்சொத்துக்களில் வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதிகாரசபையின் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறிமுறையைத் தயாரித்து அதற்கிணங்க மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அது தொடர்பான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | அமைச்சரவைத் தீர்மானத்தை வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் நடைமுறைப்படுத்துவதுடன், அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்களை மீளப் கையகப்படுத்தி கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் முகப்பு வளாகத்தின் சரக்கு இருப்பின் பெறுமதி ரூபா 157 மில்லியன் என கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 47.86 மில்லியனான உதிரிப் பாகங்கள் 2024 ஆண்டினுள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிராமையினால் இறுதி இருப்பின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் மிகை அப் பெறுமதியினால் மிகையாக | முகப்பு வளாகத்தின் சரக்கு இருப்பின் பெறுமதி ரூபா 157 மில்லியன் என கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 47.56 மில்லியனான உதிரிப் பாகங்கள் 2024 ஆண்டினுள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய கணக்கு சீராக்கல்கள் 2025 மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இருப்பு சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் மிகைக்கு ஏற்பட்ட பாதிப்பு எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களினுள் சீராக்கப்பட்டு சீர் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (எ) | இப்பாகமுவ குபுக்கெடே மடகல்ல வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய 2022 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்ட ரூபா 52.04 மில்லியனான பெறுமதி மீளாய்வாண்டில் மீண்டும் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வீதி சொத்துக்கள் ரூபா 52.04 மில்லியன் அதிகமாக நடைமுறை வேலைகள் கணக்கு அப் பெறுமதியினால் குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டில் தவறுதலாக மீண்டும் மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அது 2025 ஆம் ஆண்டில் நாளேட்டு குறிப்பு இலக்கம் 156/J03 ஊடாக சீர் செய்யப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழ் உள்ள முறைமை மீளாய்வின் போது, பிறழான நிதி அறிக்கையிடல் ஊடாக மோசடியாளர்களுக்கு இருக்கும் வாய்ப்புக்களைத் தடுக்கும் வகையில் விசேட கவனம் செலுத்தி பொறுப்புக்களைத் தீர்மானித்து, உள்ளகக் கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கி மேற்பார்வை செய்தல் வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் ஊடாக தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஏ) | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் மூலதன செலவு விடயத்தின் கீழ் வீதி விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தலுக்காக (RWI) அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் ஊடாக ஏற்கப்பட்ட கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அச் செலவின விடயத்தின் கீழ் மீளாய்வாண்டில் ஏற்கப்பட்ட ரூபா 1,300.41 மில்லியன் மூலதனமாககப்படுவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக குறிப்பிடப்பட்டமையின் காரணத்தினால் அப் பெறுமதியில் நிதிக் கூற்றில் நடைமுறை வேலை பெறுமதி மற்றும் மிகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நேரடி தொழிலாளர் முறையின் கீழ் கட்டப்பட்ட வீதிகளின் கட்டுமானத்திற்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,300.41 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், இந்த வேலைகளுக்குத் தேவையான நேரடி தொழிலாளர்கள் மாகாணப் பொறுப்பு பணிப்பாளர் அலுவலகங்களில் உள்ள நேரடி தொழிலாளர்களிடமிருந்து பெறப்படுகின்றதுடன் மூலப்பொருட்களுக்கான நிதி இந்த செலவினத் தலைப்பின் கீழ் பெறப்படுகின்றது. இந்த நேரடி தொழிலாளர் முறையின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளை மூலதனமாக்குவது நடைமுறையில் சிக்கலான விடயமாகும். இந்த வீதிகள் SLRAM அமைப்பின் ஊடாக மூலதனமாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) சான்றுறுதிப்படுத்த வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது, நடைமுறையிலுள்ள வேலைகள் சரியாகக் கணக்கிடப்படுதல் குறித்த உள்ளகக் கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கி மேற்பார்வை செய்தல் மற்றும் எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களினுள் தவறுகளைத் சீர் செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் மகநெகும இமல்ஷன் கம்பனியின் 99 சதவீத நேரடி கட்டுப்பாட்டு உரித்து அதிகார சபைக்கு உள்ளதென வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கான பங்குச் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கம்பனியின் பணிப்பாளர் சபையினுள்ளும் அச் சதவீதத்திற்கு இணையான பிரதிநிதித்துவம் அதிகாரச் சபைக்கு இல்லாததுடன் தொடர்புடைய கம்பனியில் ரூபா 01 மில்லியன் முதலீடு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தொடர்புடைய கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அது கடன் தொகையாக கணக்கிடப்பட்டிருந்த வழு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த கம்பனிகள் தற்போது கலைக்கப்பட்டு வருகின்ற நிலையில், கலைப்பு பரிவர்த்தனைகளின் போது இந்தக் பிரச்சினை தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனி தொடர்பான அதிகாரசபையின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தாபன விதிக் கோவையின் II ஆம் பாகத்தின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணை மேற்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | தூண்களில் மீது நிர்மாணிக்கப்படுகின்ற அதிவே வீதி (புதிய களனி பாலத்திலிருந்து அதுருகிரிய வரை) செயற்திட்டம் 16.4 km வரை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2017 ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் காணிகள் சுவீகரிக்கும் செயன்முன்னேற்றம் 85 சதவீதமாக நிலவும் போது 2023 சனவரி 31 ஆந் திகதி செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அப்போது காணப்பட்ட காணி சுவீகரிக்கும் செயன்முன்னேற்றம் மீளாய்வாண்டு இறுதியில் அவ்வாறே நிலவியமை காரணமாக காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38(ஆ) பிரிவின் பிரகாரம் வர்த்தமானி பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டிருந்த 2020 ஆம் ஆண்டு தொடக்கம் சட்டரீதியான இழப்பீட்டு தொகை 07 சதவீத | இந்த செயற்திட்டம் அமப/23/0631/608/47 ஆம் இலக்க மற்றும் 2023.05.03 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் இராஜகிரிய வரையான பகுதிக்கு இழப்பீடு மற்றும் வட்டி கொடுப்பனவிற்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தை இடைநிறுத்துதல் தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், சுவீகரிக்கப்பட்ட காணிகளைப் பயன்படுத்தல், நட்டஈடு வழங்குதல் மற்றும் மாற்று நடவடிக்கைகள் குறித்த பகுப்பாய்வை மேற்கொண்டு அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதுடன், ஏற்படும் இழப்புக்கள் மற்றும் சேதங்களை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த வட்டி செலுத்த வேண்டிய போதிலும் அதற்குரிய ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஓ) | மத்திய அதிவேக வீதி கட்டம் IV செயற்திட்டத்திற்காக காணி கையகப்படுத்தும் சட்டத்தின் 38 (அ) பிரிவின் கீழ் 475 ஹெக்டேர் காணி கையகப்படுத்தப்பட்டிருந்ததுடன் காணி கையகப்படுத்தும் சட்டத்தின் 10 (1) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 2335 காணித் துண்டுகளில் 218 காணித் துண்டுகளின் மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டுத்தொகை ரூபா 455.51 மில்லியனாக இழப்பீடு நிர்ணயிக்கப்பட்ட 207 காணித் துண்டுகள் காணப்பட்டதுடன் மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற 1571 காணித் துண்டுகளில் 863 காணித் துண்டுகளுக்கு தொடர்புடையதாக 17 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட 475 ஹெக்டெயர் காணிகளுக்குரிய செலவினம் காணி சொத்தின் கீழ் குறிப்பிடுவதற்கு மற்றும் மதிப்பீட்டு அஙிக்கை பெறப்பட்டிருந்த காணிகளுக்காக மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு மற்றும் வட்டித்தொகை இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த செலவுகள் நடைமுறையிலுள்ள வேலைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருப்பதனால் அது சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அமப/23/0345/60/030 ஆம் இலக்க அமைச்சரவை மற்றும் 2023.03.20 திகதிய தீர்மானத்தின்படி, இந்த காணிகள் தொடர்பான அரசாங்கத்தின் உரிமை மாத்திரமே பிரதேச செயலாளர்களால் இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது இந்த செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதால், அதற்கேற்ப எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளதை மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) சான்றுறுதிப்படுத்த வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழ் உள்ள முறைமை மீளாய்வின் போது, காணி கையகப்படுத்தல் தொடர்பான விசேட கவனத்துடன் பொறுப்புக்களை உறுதிப்படுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஔ) | வீதி விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் நடைமுறை வேலை கணக்கின் 2024 திசெம்பர் 31 இல் ரூபா 2,817.45 மில்லியனாக குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியினுள் ரூபா 355.72 மில்லியன் பெறுமதியான 8 ஒப்பந்தங்கள் 2017, 2018, 2019, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் கணிசமான நிறைவுச் சான்றிதழ் )Substantially Completed Certificate) | ஒப்பந்தக் குறைபாடுகள் சரிசெய்யப்படாததால், வேலை நிறைவுச் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. உரிய வேலை நிறைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதன் பின்னர், வீதிகள் சொத்துக்களாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வீதி சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதிகார சபையினால் தொடர்புடைய வீதிகள் குறிப்பாக நிறைவு செய்யப்பட்டுள்ளதா என மதிப்பிடப்பட்டு வீதி சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நடைமுறை வேலை பெறுமதி மிகையாகவும் வீதி சொத்துக்கள் பெறுமதி குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (க) | மீளாய்வாண்டு இறுதியில், ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 4517.51 மில்லியன் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக ஒதுக்கப்பட்டு நிதி நிலைமையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், அம் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,500.74 மில்லியனான நிறுத்தி வைக்கப்பட்ட பெறுமதி 100,000 கி.மீ வீதிகள் செயற்திட்டத்திற்கு தொடர்புடையதாவதுடன் அச் செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் பரஸ்பர உடன்பாட்டின் கீழ் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தம் முடிவடையும் காலம், குறைப்பாட்டிற்கான உத்தரவுக் காலம், கால நீட்டிப்புக்கள், செயல்திறன் பிணைப்பத்திரம் போன்ற தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள அனைத்துத் நிறுத்தி வைக்கப்பட்ட தொகைகளும் மிக விரைவில் தீர்க்கப்பட வேண்டியிருப்பதால், அவை நடைமுறை பொறுப்புக்கள் கீழ் காட்டப்பட்டுள்ளன. | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தற் பணத்தொகை சரியாகக் கணக்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி ரூ.மி | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி ரூ.மி | வேறுபாடு ரூ.மி | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| அதிவேக வீதிகள் பயன்படுத் தும் வருமானம் | 12,153.45 | 12,092.59 | 60.86 | QR பெறுவனவு, ETC பெறுவனவு மற்றும் சீதுவையிலிருந்து வரும் ஜா-எல வழியாக வெளியேறும் வாகனங்களுக்கான பயணச்சீட்டுகள் POS இயந்திரங்கள் ஊடாக வழங்கப்படாமையினால் 2024 ஆம் ஆண்டில் தரவுகள் கணினி அமைப்பில் உள்ளடக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்துவ தற்கு முன்னர், வருமானங்கள் சரியாகக் கணக்கிடப்பட்டுள்ள தை மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன், வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.5 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கலின் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1500 கி.மீ மாற்று வீதி அமைபொன்று அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்குரிய பொறியியல் மதிப்பீடு பின்தொடரும் போது நிர்வாக செலவிற்காக 6.5 சதவீதம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வரம்பினை மிகைத்து அதிகார சபைக்கு சொந்தமான வீதிகள் நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 101.49 மில்லியனில் ரூபா 69.88 மில்லியனான அதாவது 68 சதவீதம் மேலதிக நேரம், விடுமுறை தினம், போக்குவரத்து செலவு, தொழிநுட்ப மீளாய்வு குழு கொடுப்பனவு எரிபொருள் மற்றும் ஏனைய செலவினங்கள் உள்ளடங்கலாக நிர்வாக செலவினத்திற்காக ஏற்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 இன் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் | 2024/CL/25 ஆம் இலக்க 2024.04.19 திகதிய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றறிக்கை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் MOT & M/ADM/04 (01)/RDA ஆம் இலக்க மற்றும் 2024.04.09 திகதிய கடிதம் ஊடாக 1500 கி.மீ செயற்திட்டமானது மிகக் குறுகிய காலத்திற்குள் துரிதமாக முடிக்கப்பட வேண்டியிருந்தமையினால், 6.5% பொது மேலதிகச் செலவுகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தின் கீழ் இந்த செயற்திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | முறையான அதிகாரமின்றி செலவுகளை மேற்கொள்ளுதல் தொடர்பில், தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் உரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் கீழ் பெறப்பட்ட நிதியில் ரூபா 69.88 மில்லியன் முறையான அதிகார அனுமதயின்றி மீண்டெழும் செலவிற்காக செலவிடப்பட்டிருந்தமையினால் மற்றும் இந்த செலவினம் நடைமுறையிலுள்ள வேலையாக மூலதனமாக்கப்பட்டதனால் மீளாய்வாண்டின் நடைமுறையிலுள்ள வேலை பெறுமதி அதிகமாகவும் செயற்பாட்டு செலவினம் குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. | அதன் பிரகாரம் அதிகாரசபைக்குச் சொந்தமான மற்றும் சொந்தமில்லாத வீதிகள் ஆகிய இரு பிரிவுகளையும் உள்ளடக்கிய வீதி நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளடன், அதற்கான பொது மேலதிகச் செலவுகள் ஏற்கப்பட்டுள்ளன. மேலும், நிர்வாகச் செலவுகளுக்காக அமைச்சு தனியான நிதியை வழங்கப்படாததுடன் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட மொத்த நிதிக்குள்ளேயே அவை முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளன. | |

### 1.5.6 ஒருங்கிணைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சர்வதேச பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 35 இன் 38 வது பிரிவுக்கு இணங்க, பொதுத்துறை சட்டரீதியான நிறுவனங்களை ஒருங்கிணைத்து நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் அதன் 04 துணைக் கம்பனிகளை ஒருங்கிணைத்து குழுமத்திற்குரிய ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை பத்திரிக்கையின் ஊடாக இந்த துணைக் கம்பனிகள் கலைப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் நியமம் இலக்கம் 01 இன் 38, 39 பிரிவுகளின் பிரகாரம் இந்த கம்பனிகளின் தொடர்ந்து இயங்கப்படாமையினால் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை. | குழுமத்தின் கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமான ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான பொறுப்பைத் தீர்மானித்து, அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை ரூ.மி | இல்லாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பதிவழிக்கப்பட்ட நடைமுறையிலுள்ள வேலை பெறுமதி | 8,550 | வீதிகள், உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட மற்றும் கையேற்கப்பட்ட பதிவேடுகள் | கையளிக்கப்பட்டுள்ள அனைத்து வீதிகளுக்குமுறிய ஆவணங்கள் அவ் அலுவலகங்கள் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) ஆ பிரிவுக்கு இணங்க, வீதிகளை கையளித்தல் மற்றும் கையேற்றல் தொடர்பான கோவைகள் மற்றும் ஆவணங்களை முறையாகப் பேணுவது குறித்த எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் நிதி ஒதுக்கீடு | 151,652 | ஒவ்வொரு செலவின விடயங்களுக்குரிய பேரேட்டு கணக்குகள் | வரிசை அமைச்சினால் கிடைக்கும் கட்டுநிதி ஒதுக்கீடுகள் குறிப்பு இலக்கம் 29 மற்றும் 30 ஊடாக காட்டப்பட்டுள்ளதுடன் செலவுகள் குறிப்பு இலக்கம் 41-46 இன் கீழ் காட்டப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக மூலதனமாக்கலுக்காகக் கிடைக்கும் நிதியேற்பாடுகளுக்குரிய செலவு குறிப்பு இலக்கம் 13 இன் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், நடைமுறையிலுள்ள வேலைகளுக்கான செலவு குறிப்பு இலக்கம் 15 ஊடாக காட்டப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) ஆ பிரிவுக்கு இணங்க, அமைச்சிடமிருந்து பெறப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அது தொடர்பான செலவுகளைச் சரியாக அடையாளங் காணக்கூடிய வகையில், பேரேட்டுக் கணக்குகளைத் தனித்தனியாகப் பேணுவது குறித்த எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | காணி | 60,549.89 | நிலையான சொத்துக்கள் பதிவேடு காணிகளின் உரித்து இனங்காணல் பதிவேடு | காணியின் பெறுமதி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பிண்ணினைப்பு 18 ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) ஆ பிரிவுக்கு இணங்க நிலையான சொத்து பதிவேடுகள் மற்றும் காணிகளின் உரிமை மற்றும் அது தொடர்பான கோவைகள் மற்றும் ஆவணங்களைப் பேணுவது குறித்த எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | வீதிச் சொத்துக்கள் | 6,792.09 | குறிப்பாக ஏற்கப்பட்ட செலவுகள், வீதிகள், நாட்கள், வீதிகளில் நிலைத்திருத் தன்மை, பெறுமதி மற்றும் தேய்மானம் கணித்தல் போன்றவற்றின் துல்லியம் உறுதி செய்வதற்குரிய மூல ஆவணங்கள் | வீதிச் சொத்துப் பதிவேட்டைப் நாளதுவரையாக்கப்படும் போது ஏற்பட்ட பிழை காரணமாக வீதியின் பெயரைச் சரியாகக் குறிப்பிடுவது தவிர்க்கப்பட்டதுடன், பொது குறிப்பு இல. 10 இல் சரியாக ஏற்கப்பட்ட மதிப்பு மற்றும் தூரம் என்பன பதியப்பட்டு நிதிக் கூற்றுக்களினுள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக தகவல்கள் பிண்ணினைப்பு 19 ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) ஆ பிரிவுக்கு இணங்க நிலையான சொத்து பதிவேடுகள் மற்றும் காணிகளின் உரிமை மற்றும் அது தொடர்பான கோவைகள் மற்றும் ஆவணங்களைப் பேணுவது குறித்த எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மற்றும் தகவல்கள் | | |
| (உ) | நேரடி மூலப்பொருட்கள் இருப்பு | 1,222.23 | இருப்பு உறுதிப்படுத்தல் பதிவேடு | தொடர்புடைய தகவல்கள் 2025.06.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஊ) | கடன்பட்டோர் மீதி (பொருளாதார அமைச்சு உள்ளடங்கலாக) | 833.17 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | தொடர்புடைய மீதி உறுதிப்படுத்தல்கள் அரச கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (எ) | கடன்கொடுநர் மீதி | 17.47 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | தொடர்புடைய மீதி உறுதிப்படுத்தல்கள் அரச கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஏ) | ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 525.014 | சொத்துக்களுக்கு உரிய அட்டவணைகள், தேய்வு கணக்கிடலுக்குரிய ஆவணங்கள் | நெடுஞ்சாலைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட இந்த சொத்துக்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பயன்பாட்டிலுள்ள கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு மதிப்பீட்டு பெறுமதி நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) ஆ பிரிவுக்கு இணங்க நிலையான சொத்து பதிவேடுகள் மற்றும் காணிகளின் உரிமை மற்றும் அது தொடர்பான கோவைகள் மற்றும் ஆவணங்களைப் பேணுவது குறித்த எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரசபையின் நிர்மாணப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வீதி விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் வேலைகளுக்காக, வேலை ஆரம்ப முற்பணமாக ரூபா 71.45 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிலுவைத் தொகையில் உள்ளடங்கியிருந்த 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 13 மில்லியன் மற்றும் 2020 ஆம் | வட மாகாணத்திற்குச் சொந்தமான ரூபா 13 மில்லியனில், ரூபா 8.3 மில்லியன் இதுவரையில் அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கான உரிய பட்டியல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதால், அந்தப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். மேல் மாகாணத்திற்குச் சொந்தமான ரூபா 7 | பெறவேண்டிய மீதிகள் உரிய கடன் பட்டோரிடமிருந்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தப்படாத மீதிகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளிலிருந்து விலகி வழங்குவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் குறித்து தாபன விதிக்கோவையின் II |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 7 மில்லியன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது. | மில்லியன் பணத்தை அறவிடுவதற்காக விசேட செயற் திட்டங்கள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அந்தப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணையொன்று நடத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 27 மாகாண ஒப்பந்தக்காரர்களுக்கு 47 ஒப்பந்தங்களுக்காக ரூ. 131 மில்லியன் வேலை முற்பணமாக வழங்கப்பட்டிருந்துடன் அந்தப் பெறுமதிக்குள், மேல் மற்றும் மத்திய மாகாணங்கள் தொடர்பான 2017 முதல் 2020 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த ரூ. 29.5 மில்லியன் மீளாய்வாண்டு வரையிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, அது தொடர்பான சேதத்திற்கான சீராக்கல்கள் 2024 நிதிக் கூற்றுக்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிராததுடன் பிணைமுறி காலாவதியாகிவிட்டதா என்பதை உறுதிப்படுத்த, உரிய பிணைமுறிப் பிரதிகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்திற்குட்பட்ட அரச நிர்மாண கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட வேலை ஆரம்ப முற்பணங்களில் 2024.12.31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 13,530,582.88 ஆகும். குறித்த ஒப்பந்தக் கம்பனியால் முற்பணம் தீர்க்கப்படுவது போதுமான வேலைகள் மேற்கொள்ளமையின் அடிப்படையில் மற்றும் பட்டியல் செலுத்தப்படாமையின் அடிப்படையில் இந்த முற்பணம் அறவிடப்பட முடியாதுள்ளது. | முற்பணத்தை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதுடன் தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்றை நடத்தித் தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய கூட்டுத்தொகை ரூபா 3,017.64 மில்லியனான கடன் கொடுநர் மீதிகளில் ரூபா 27.7 மில்லியன் 02 தொடக்கம் 05 ஆண்டுகள் இடையேயும் ரூபா 13.8 மில்லியன் 05 தொடக்கம் 10 ஆண்டுகள் இடையேயும் ரூபா 6.08 மில்லியன் 10 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்த போதும் தீர்க்கப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 10 ஆண்டுகள் கடந்துள்ள ரூபா 6.08 மில்லியன் பெறுமதியான தொகை, வீதிப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களால் வைப்புச் செய்யப்பட்ட பிணை வைப்புப் பணமாகும். இது தொடர்பில் 2025 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 27.7 மில்லியன் மற்றும் 5-10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 13.8 மில்லியன் தொடர்பில் தேவையான தீர்வு நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | உரிய சேவைகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பான நடைமுறைகளைப் பின்பற்றியதன் பின்னர் கடன் கொடுநர்கள் அடையாளம் காணப்படுவதாகவும், செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் சரியான வகைப்படுத்தலுடன் அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும், உரியவாறு தள்ளுபடிகள் மற்றும் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்திய பின்னரே, உரிய பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய |

கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காகத் தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும்.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய பொதுவழிகள் சட்டம் | | | |
| i. | 6(1) ஆம் பிரிவு | உயர் தரத்திலான வீதி வலையமைப்பு கொள்கையொன்று தயாரிப்பதற்கு, மூலோபாயங்களை அபிவிருத்தி செய்வதற்கு, வீதிகள் தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் வீதிகள் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் எடுப்பதற்கு, அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்படும் வீதி திட்டங்கள் தொடர்பான விடயங்களை கையாளுவதற்கு அமைச்சருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுப்பதற்காக நிறுவப்பட வேண்டிய “வீதி வலையமைப்பு அபிவிருத்தி மதியுரை சபை” நிறுவப்பட்டிருக்கவில்லை. | புதிய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் கீழ் வீதி அமைப்புகள் அபிவிருத்தி ஆலோசனைக் குழுவை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக “வீதி வலையமைப்பு அபிவிருத்தி மதியுரை சபை” நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 7(3) ஆம் பிரிவு | மாவட்ட வீதி அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் ஊடாக அனைத்து மாவட்டங்களுக்காகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, தொடர்புடைய மாகாண சபை, தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய முகவர் நிறுவனங்களால் கையேற்கப்பட்டுள்ள மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறிப்பாக காண்பிக்கப்படுகின்ற "ஒருங்கிணைந்த வீதி அமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்" தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்பு மாவட்ட வீதி அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்களுக்குத் தேவைப்படுவதால், அந்தந்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டதன் பின்னர், வீதி அமைப்புகள் அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் பணிகளை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் "ஒருங்கிணைந்த வீதி அமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்" தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | | |
| i. | நிதி பிரமாணம் 3(2) ii (ஆ) | ஆரம்ப கிரயம் ரூபா 10 மில்லியனிற்கு குறையாத மற்றும் வருடாந்த மீண்டெழும் மற்றும் பராமரிப்பு கிரயம் ரூபா 05 இலட்சத்தினை மிகைத்த செயற்திட்டங்கள் இரண்டு கட்டங்களின் போது அங்கீகரிக்கும் நடைமுறை முழுமையாக பின்பற்றப்பட வேண்டிய போதிலும், 100,000 கி.மீ வீதிகள் செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 3928 வீதி அபிவிருத்தி ஒப்பந்த தொகுப்புக்களுக்கான பூர்வாங்க அங்கீகாரம் மட்டும் பெற்றுக் | 100,000 கி.மீ வீதித் செயற்திட்டத்திற்கான ஆரம்ப அங்கீகாரம் 2019.12.18 திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் 19/3398/221/001 ஆம் இலக்க தீர்மானம் ஊடாக பூர்வாங்க அங்கீகாரம் பெறப்பட்டதுடன், இச் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் முறைமை மற்றும் நிதி ஒதுக்கீட்டு முறைமைக்கான அமைச்சரவைத் தீர்மானம் 2020.02.05 திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் இலக்கம் 20/0142/221/005 ஊடாக இரண்டாம் அங்கீகாரம் | நிதி பிரமாணத்திற்கு இணங்காமை தொடர்பில், தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்ளப்பட்டிருந்ததுடன், அதன் கீழ் 17,847 கி.மீ வீதிகள் அபிவிருத்திக்காக ஏற்கப்பட்ட ரூபா 188,955.91 மில்லியன் கிரயத்திற்கான முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பெறப்பட்டது. | |
| ii. | நிதி பிரமணாம் 102-113 | 2008 மற்றும் 2009 ஆம் ஆண்களில் சனாதிபதி செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 3.24 மில்லியன் பெறுமதியான 04 வாகனங்கள் மற்றும் கிரயம் குறிப்பிடப்படாத 01 வாகனம் அவ் அலுவலகத்தில் இல்லையென அதிகார சபைக்கு சனாதிபதி செயலகத்தின் போக்குவரத்து பணப்பாளரினால் 2015 மார்ச் 17 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டுள்ளதென வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகததினால் 2024 ஒக்தோபர் 01 ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொடர்புடைய வாகனங்கள் கையளித்த மற்றும் கையேற்கப்பட்ட நபர்கள் தொடர்பாக முறையாக விசாரணையொன்று நடத்தப்பட்டு நிதி பிரமாணம் பிரகாரம் பொறுப்பு கூற வேண்டியவர்கள் இனங்காண்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஒரு வாகனம் தற்போது சூரியவெவ பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், அதனை மீண்டும் பெற்றுக்கொள்ள சட்டப் பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது. மற்றொரு வாகனம் கொதடுவ பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு, அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், குறித்த வாகனம் அங்குலான வேலைத்தளத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய 03 வாகனங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. | நிதி பிரமாணத்திற்கு இணங்காமை தொடர்பில், தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| iii. | நிதி பிரமாணம் 371 (5) | தற்காலிக உப கட்டுநிதி மீதிகள் மீண்டும் கணக்கிடல் எந்த முறையில் இடம் பெற்றாலும் அக் கட்டுநிதி வழங்கப்பட்ட நிதி ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பிந்தாமல் திருப்பி கொடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் அதிகார சபையினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 119.95 மில்லியன் முற்பணம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அப் பெறுமதியினுள் கூட்டுத்தொகை ரூபா 53.9 மில்லியனான 01 ஆண்டு தொடக்கம் 35 ஆண்டுகள் வரையான காலமாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை | அறவிடப்பட முடியாதுள்ள முற்பணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முற்பணம் பெற்றுக் கொடுத்தல் தீர்ப்பனவு செய்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டியதுடன் தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| iv. | நி.பி 880 | நிதி பிரமாணம் பிரகாரம் காசு வருமானம் கையேற்றல் தொடர்பாக நிர்வாக ரீதியாக பொறுப்பாகவுள்ள அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை புரிகின்றமை தொடர்பில் 612 ஆம் பிணைப்பணம் கட்டளை சட்டத்திற்கு அமைவாக பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் அதிவே வீதி சேவைக்காக மீளாய்வாண்டில் இறுதியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 943 காசாளர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில் லை. | இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் குறித்த காசாளர்களிடமிருந்து பிணைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணத்திற்கு இணங்காமை தொடர்பில், தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தாபன விதிக் கோவையின் XIX அதிகாரத்தின் 7.2 | குத்தகை காலம் மிகைத்து இல்லத்தில் வசிக்கும் | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேவையான | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பந்தி | காலப்பகுதிக்காக, உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து 08 சதவீத தண்டனைக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் தென் மாகாண அலுவலகத்தில் பணிபுரியும் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 618,213 தண்டனைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தண்டனைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2019 திசெம்பர் 17 திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.6 ஆம் பந்தி | 2020 சனவரி 01 ஆந் திகதிக்கு பின்னர் சந்தை விலை மேற்கோள் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் பெறுகை பணிகள் e-GP Portal ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையினால் அந்த மின்னணு பெறுகை முறை (e-procurement) இது வரையிலும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | சந்தை விலை மேற்கோள் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் கொள்வனவுப் பணிகள் e-GP Portal ஊடாக ஆரம்பிக்கப்பட்டதுடன், அதில் வழங்குனர்கள் தனித்தனியாகப் பட்டியலிடப்படாததால், வழங்குனர்களை தேர்ந்தெடுப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டன. e-GP பணியகத்தினால் அது சீர் செய்யப்பட்டதன் பின்னர், எதிர்காலத்தில் சந்தை விலை மேற்கோள் முறைமையின் கீழ் e-GP ஊடாக அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது, பெறுவனவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, பொறுப்புக்களை உறுதிப்படுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 மற்றும் 2022 மே 30 திகதிய 04/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | இந்த சுற்றறிக்கை ஊடாக செலவினம் கட்டுப்படுத்தல் தொடர்பாக ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும், அவ் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படாது வரிசை அமைச்சின் மற்றும் இராஜாங்க அமைச்சின் தேவைப்பாடுகளுக்காக 2023 சனவரி மாதம் தொடக்கம் 2024 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் அதிகார சபைக்கு சொந்தமான | வரிசை அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் கோரிக்கையின் பேரில் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, அதற்குத் தேவையான எரிபொருளும் அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது எரிபொருள் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு அதிகார சபையின் வளங்கள் முறையற்ற பயன்பாடு தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாகனங்கள் பயன்படுத்துவதற்கு பதிலாக ரூபா 4.39 மில்லியனும், 12,605.91 லீட்டர் எரிபொருள் முறையான அங்கீகாரமின்றி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 1995 யூலை 21 திகதிய சனாதிபதி செயலகம் வெளியிட்ட அரசாங்கத்தின் காணி கையகப்படுத்தல் தொடர்பான வழிக்காட்டல் கோவையின் 07 மற்றும் 08 ஆம் பந்திகள் | அரசாங்க காணிகள் ஒப்படைத்தல் தொடர்பான வழிக்காட்டி கோவையின் பிரகாரம், சந்தை அடிப்படையிலான குத்தகை ஒப்பந்தங்களுக்கு நியாயமான குத்தகை வாடகை நிர்ணயிக்கப்பட வேண்டியதுடன், ஒப்பந்த நிபந்தணைகளாக 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு திருத்தப்படாது, களுத்தறை மாவட்டத்தின் மதுகம பிரதேச செயலாளர் பிரிவிற்கு சொந்தமான கொலெஹெகட கிராமத்தில் அடிப்படை 4363 ஆம் வரைப்பட இலக்கத்தைக் கொண்ட 6.40 ஹெக்டெயர் காணியானது 01 தொடக்கம் 09 வரையான 09 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, வெலிபென்ன சேவைப் பகுதி கட்டுமானத்திற்காக அக் காணி துண்டுகளில் 04 ஆம் இலக்க மற்றும் 06 ஆம் இலக்க காணிகள் 99 ஆண்டுகளுக்கு மொத்தமாக (ஒரே தவணையில் செலுத்தும் வகையில்) ரூபா 21.8 மில்லியன் மற்றும் ரூபா 10,000 வருமாந்த பெயரளவு குத்தகை வாடகை அடிப்படையில் தனியார் கம்பனியொன்றிற்கு 2011 | இந்தக் காணி கையகப்படுத்தலுக்கு தொடர்புடைய அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2012.09.14 ஆம் திகதிய மதிப்பீட்டின் ஊடாக மேலே குறிப்பிடப்பட்ட வெலிபென்ன கொளஹெகெட பிரதேசத்தில் 4363 ஆம் வரைப்பட இலக்கத்தை கொண்ட 4, 6, 1 மற்றும் 9 ஆம் இலக்க காணித் துண்டுகள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.<br>அதில், 4 மற்றும் 6 ஆம் இலக்க காணித் துண்டுகள் 99 ஆண்டுகளுக்கு மற்றும் 1 மற்றும் 9 ஆம் இலக்க காணித் துண்டுகள் 30 ஆண்டுகளுக்கும் உரிய குத்தகைத் தொகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>அந்த மதிப்பீட்டு அறிக்கையில் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை குத்தகைக் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை. | காணி கையகப்படுத்தல் தொடர்பான வழிக்காட்டி கோவையின் ஆலோசனைகளை மீறிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் ஆண்டில் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், அக் காணி துண்டுகளில் 01 ஆம் இலக்க மற்றும் 09 ஆம் இலக்க காணிகள் 30 ஆண்டுகளுக்காக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நடத்துவதற்கு மொத்தமாக (ஒரே தவணையில் செலுத்தும் வகையில்) ரூபா 2.92 மில்லியன் மற்றும் ரூபா 10,000 வருடாந்த குத்தகை வாடகை அடிப்படையில் வேறு தனியார் கம்பனியொன்றிற்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | 2018 சனவரி 24 திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றிக்கை | | | |
| i. | 1 ஆம் பந்தி | அதிகார சபையினால் மனித வளங்களை அபிவிருத்த செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் பதவியணியினர்களுக்காக வருடாந்த செயலாளற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு அல்லது செயலாற்றலினை மதிப்பீடு செய்யும் நடைமுறையினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | மனித வள அபிவிருத்தி முறைமை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், மனித வள முகாமைத்துவ கையேடு தயாரிக்கப்பட்டதன் பின்னர், செயல்திறன் மதிப்பீட்டு முறைமை ஆரம்பிக்கப்படும். | அதிகாரசபையின் அதிகாரிகளின் செயலாற்றல் மதிப்பீடு செய்வதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்கி, மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகளை முறைப்படுத்த வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 5 ஆம் பந்தி | மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தித் திட்டம் (உள்ளக பயிற்சிகள்) இன் பிரதியொன்று பிண்ணினைப்பு 25 ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 2009/09 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக உறுதி செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவுகள் உறுதி செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது வருகை பதிவேட்டின் பிரகாரம் சேவைக்கு வருகை தந்த மற்றும் வெளியேறிய நேரங்கள் பரிசோதனை செய்ததன் அடிப்படையில் மீளாய்வாண்டில் ரூபா 94.46 மில்லியன் மேலதிக நேரக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மாத்தறை நிர்வாக பொறியியல் அலுவலத்தில் கடமை புரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் 2024 மார்ச் 25 ஆந் திகதி தொடக்கம் 2025 பெப்ரவரி 11 ஆந் திகதி வரை காலப்பகுதியில் வருகை மற்றும் வெளியேறல் உறுதி செய்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தாதிருந்த போதிலும் அக் காலப்பகுதியில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 1.09 மில்லியன் அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | சில உத்தியோகத்தர்களின் மேலதிக நேர கொடுப்பனவுகள் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையிலும், சில உத்தியோகத்தர்களின் மேலதிக நேர கொடுப்பனவுகள் வருகைப் பதிவேடுகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது, கைவிரல் அடையாள இயந்திரத்தின் தரவுகள் மூலம் வருகை மற்றும் வெளியேறுதல் உறுதிப்படுத்தப்படும். | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு சுற்றறிக்கைகளுக்கு இணங்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | 2006 செப்தெம்பர் 22 திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிண்ணினைப்பு II இன் 04 ஆம் பந்தி | திணைக்களத்தின் கட்டளைகளுக்கு மற்றும் வழிகாட்டிகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஆட்சேர்பபு மற்றும் பதவியுயர்வு நடைமுறையினை தயாரிப்பதற்கு உட்பட்டு அத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆளணியினரை மீளமைப்புச் செய்யும் சிபாரிசினை அமுல்ப்படுத்தாது அதிகார சபையினால் சேர்த்துக்கொள்ளப்பட்ட 106 உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த MM 1-3 சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்க சம்பளப் பெறுமதிக்கு பதிலாக HM சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்பட்டிருந்தது. அவ் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படை சம்பளத்தினை பார்க்கிலும் ரூபா 451.58 மில்லியன் அடிப்படை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு HM 1 ஆம் சம்பளக் குறியீடு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மட்டும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு சுற்றறிக்கைகளுக்கு இணங்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | 2009 மே 26 திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்கள் அங்கீகரித்த சம்பளத்திற்கு மேலதிகமாக ஏதாவது படியினை பெற்றுக்கொள்வதாயின் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந் தும் சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவிடமிருந் தும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணையான சேவைகளை வழங்கும் இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை போன்ற நிறுவனங்களில் உள்ள நிபுணர்களுக்கு தொழில்சார் கொடுப்பனவு வழங்கப்படுவதால், அதற்கிணங்க அதிகாரசபையின் நிபுணர்களுக்கு ஏற்பட்டிருந்த சம்பள | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு சுற்றறிக்கைகளுக்கு இணங்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் வீதி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் படியாக (Professional Allowance) ரூபா 98.71 மில்லியன் மற்றும் 2015 ஏப்ரல் 04 ஆம் திகதி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அனைத்து தொழில்சார் சங்கங்களுக்குமான கடிதமொன்றினை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபை படியாக ரூபா 976.61 மில்லியனும் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | முரண்பாட்டிற்கான தீர்வாகவும், பட்டயத் தொழில்சார் நிறுவனத்தில் நிறுவன உறுப்புரிமையைப் (Corporate Membership) பெற்றுள்ள நிறைவேற்றுத் தரத்தின் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் பஎயை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி இல. 1698/2016 ஊடாக பெறப்பட்டுள்ளது. | |
| (ஓ) | 2006 தேசிய பெறுகை வழிக்காட்டி கோவை | | | |
| i. | 4.2.1 (அ), (ஆ), (உ) பந்திகள் மற்றும் 4.2.2 (அ) ஆம் பந்தி | குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக தயாரிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு ஒரு முறை தவறாமல் நாளதுவரையாக்கப்பட வேண்டிய பிரதான பெறுகை திட்டம் மற்றும் பெறுகை செயன்முறைகளின் படிநிலைகளை முறையாக விவரிக்கும் பெறுகை கால அட்டவணை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்று வருட காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் மற்றும் வருடாந்தக் பெறுகைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தையும் பெற்று, தற்போது இணையத்தளப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் படிமுறைகளை விவரிக்கும் பெறுகை கால அட்டவணையும் தயாரிக்கப்பட வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) இ பிரிவின் கீழான கட்டமைப்பு மீளாய்வின் போது இது குறித்து விசேட கவனம் செலுத்தி பொறுப்புக்களைத் தீர்மானித்து, உள்ளகக் கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கி மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 8.10.1 ஆம் பந்தி மற்றும் 8.11.4(அ)(i) ஆம் பந்தி | அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்த ஒப்பதங்கள் தொடர்பான தகவல்கள் அதிகார சபையின் இணையத்தளத்திலோ அல்லது வேறு பொருத்தமான ஊடகத்திலோ வெளியிடப்பட்டிருக்காதது டன், ஒப்பந்தத்தினை மீறிய வழங்குனர்கள் தொடர்பான தரவு மூலங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையினால் வழங்கப்படும் அதிக பெறுமதியான ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்கள் அதிகாரசபையின் இணையத்தளப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் அனைத்து ஒப்பந்த வழங்கல்களையும் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, இத்துறை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காகத் தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்களை வழங்கி மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஔ) | 2021 நவம்பர் 16 திகதிய 1/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஊடாக அறிமுகப்படுத்தப்பட் ட அரசாங்கத்தின் பொது முயற்சிகளுக்கான வழிக்காட்டி கோவை | | | |
| i. | 2.3 ஆம் பந்தி | தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் தமது நிறுவனத்தின் தாபிக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துக்கொள்ளவதற் காக, மூலோபாய திட்டம், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் தாயரிக்கப்பட்டு நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகார சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2024-2028 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட நிறுவன மூலோபாயத் திட்டம் 2024.05.21 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதுடன், 2024.06.17 அன்று அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மூலோபாயத் திட்டம், வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் என்பவற்றைத் தயாரித்து, நிதி ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல் குறித்து விசேட கவனம் செலுத்தி, பொறுப்புக்களைத் தீர்மானித்து, உள்ளகக் கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்களை வழங்கி மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 2.3 ஆம் பந்தி | அரசாங்கத்திற்குச் சொந்தமான அனைத்து முயற்சிகளும், தமக்குரிய தெளிவாக வரையறுக்கப்பட்ட கட்டமைப்புக்கள், செயன்முறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் அடங்கிய வழிகாட்டல்கள் இந்த வழிக்காட்டிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுப் பேணப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் நிதி முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், வாகன முகாமைத்துவம், காணி முகாமைத்துவம், சேவை பெறுநரின் வேலை முகாமைத்துவம், செயற்திட்டங்களுக்கிடையிலான சொத்து முகாமைத்துவம், முதலீட்டு நடவடிக்கைகள் போன்ற பிரதான துறைகள் தொடர்பில் அத்தகைய வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுப் பேணப்பட்டிருக்கவில்லை. | பிரதான துறைகளுக்காக வழிக்காட்டிகள் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய பிரதான துறைகளுக்காக வழிக்காட்டிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி, பொறுப்புக்களைத் தீர்மானித்து, உள்ளகக் கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்களை வழங்கி மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| iii. | 3.2 ஆம் பந்தி | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைக்காக (Scheme of Recruitment) பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையின் அனைத்து ஊழியர்களுக்குமான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவி உயர்வு நடைமுறையொன்று | கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளைத் தவிர, மற்ற அனைத்துப் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், மேலும் பொறியாளர் (Incorporate), சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரி, சிரேஷ்ட மின் அத்தியகட்சகர், சிரேஷ்ட இயந்திர உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு மட்டும் அங்கீகாரம் பெறப்படவில்லை. | வழிக்காட்டி கோவையின் பிரகாரம் அனைத்து ஊழியர்களுக்காகவும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை அங்கீகரித்துக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| iv. | 3.3 ஆம் பந்தி | அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த மூலோபாய திட்டத்தில் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் (Divisions of the SOE) பணியாளர்கள் தேவை, மனிதவள திட்டமாக (Human Resource Plan) காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பிரிவுகள் அடிப்படையில் பணியாளர்கள் தேவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரிவினால் அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஊழியர்களின் தேவைக்கேற்ப மனித வளத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | வழிக்காட்டி கோவையின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவின் ஊழியர் தேவை, மனித வள திட்டத்தின் பிரகாரம் முறையாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| v. | 3.5 ஆம் பந்தி | அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அரச தொழில் முயற்சியொன்றின் ஊழியரொருவரை வேறொரு அமைச்சிற்கோ அல்லது பிற நிறுவனமொன்றிற்கு விடுவிக்கப்படக் கூடாது எனவும் தொடர்புடைய அங்கீரத்துடன் விடுவிக்கப்பட்டால் அவ்வாறு விடுவிக்கப்படுகின்ற காலத்திற்கு எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படக் கூடாத போதிலும் அமைச்சரவை அங்கீகாரமின்றி நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு 07 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் சம்பளம், மேலதிகநேரக் கொடுப்பனவு மற்றும் ஒங்கிணைந்த கொடுப்பனவுகளாக ரூபா 4,384,439 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இணக்கமற்ற கொடுப்பனவுகள் மீளாய்வாண்டு இறுதி வரையில் பொறுப்பான | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஊழியர்கள் அதிகாரசபையின் தேவைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போதிலும், சேவைத் தேவைக்கேற்ப உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். வரிசை அமைச்சின் கோரிக்கையின் பிரகாரம், பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, செயற்திட்ட முகாமைத்துவ அலகுகளுக்கு இவர்கள் அதிகாரசபையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் என்பதால், இவர்களுக்கான சம்பளம், மேலதிகநேரக் கொடுப்பனவு மற்றும் பயணச் செலவுகள் என்பன அதிகாரசபையினால் செலுத்தப்பட்டுள்ளன. | சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் அதிகாரசபையின் வளங்களை வேறு நிறுவனங்களுக்கு வழங்கி, அவற்றின் செலவினங்களை அதிகாரசபையின் கணக்கில் ஏற்குமாறு செய்த பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில், தாபன விதிக் கோவையின் II ஆம் பாகத்தின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| vi. | 6.6 ஆம் பந்தி | கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கறிக்கைகள் ஏற்கனவே 60 நாட்களுக்குள் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் வரைவு வருடாந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வழிக்காட்டி கோவையின் பிரகாரம் வரைவு ஆண்டறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (க) | 2023 மே 16 திகதிய அமப/23/0738/607/051 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | 100,000 கி.மீ வீதி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள அதிகார சபைக்கு உரித்தற்ற வீதிகள் தொடர்புடைய நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இதுவரையில் வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட, அதிகாரசபைக்குச் சொந்தமற்ற 5,345 வீதிகளில், 5,125 வீதிகள் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரசபையினால் மீண்டும். கையளிக்கப்பட்டுள்ளன. | நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதிகளின் செலவினங்களை உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு முறையாகக் கையளிப்பதற்கு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, இத்துறை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டைப் வலுப்படுத்துவதற்காகத் தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்களை வழங்கி மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (கா) | 2005 நவம்பர் 03 திகதிய அமப/05/1711/016/110 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அமைச்சரவை தீர்மானித்திருந்த வீதி பராமரிப்பு பொறுப்பு நிதியம் நிறுவுவதற்கு நடவடிக்கை | வீதிப் பராமரிப்புப் பொறுப்பு நிதியத்தை ஸ்தாபிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை நெடுஞ்சாலைகள் அமைச்சு ஊடாக திறைசேரிக்குச் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீதிப் பராமரிப்பு நிதியத்தை நிறுவுவதற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரினால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருக்கவில்லை | சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் திறைசேரியினால் மேற்கொள்ளப்படவில்லை. | தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (கி) | 2023 பெப்ரவரி 06 திகதிய 23/0256/604/030 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கான அரச செலவீனங்கள் மீளாய்வு குழுவின் (PERC) பொது பரிந்துரைகள் | | | |
| i. | 05 ஆம் இலக்க பரிந்துரை | வீதி அபிவிருத்தி தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிகள் அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய வீதிகளுக்கு மட்டும் (A மற்றும் B வகுப்பிற்குரிய) மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 1500 கி.மீ செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 12,700.95 மில்லியனில் ரூபா 11,007.27 மில்லியன் தொகை சதவீதமாக 87% அதிகார சபைக்கு சொந்தமில்லாத வீதிகள் கட்டுமானத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையினால் அரச நிதி ஒதுக்கப்பட்ட நோக்கத்திற்கு அப்பாற்பட்டு செலவிடப்பட்டிருந்தது. | MF/NB/CM/01/2024/117/01 ஆம் இலக்க மற்றும் 2024.01.08 திகதிய அமைச்சரவை பத்தரிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் விடயப்பரப்பிற்குரிய வீதிகளைப் பராமரிக்கவும், பெறப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்குப் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 13 ஆம் பரிந்துரை | அதிகார சபையின் கீழுள்ள அனைத்து வீதிகளின் நகர்வுகள் தொடர்பான தரவுகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த மத்திய தரவுத்தளத்தை நிறுவி அபிவிருத்தி நோக்கங்களுக்காக போக்குவரத்து தொடர்பான தரவுக் தேவைப்படும் எந்தவொரு அரச நிறுவனமும் அணுகக்கூடிய வசதியை அதிகார சைபயினால் வழங்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபையின் கீழான அனைத்து வீதிகளின் நகர்வுகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த மத்திய தரவுத்தளமொன்று நிறுவப்பட வேண்டியதுடன் இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காகத் தேவையான நடைமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செயற்பாட்டு விளைவுகள் ரூபா 31,548 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 80,232 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 48,684 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மூலதன வருமானம் கடந்த ஆண்டிற்கு இணையாக ரூபா 68,374 மில்லியனினால் குறைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்படாத ஒட்டுமொத்த கடன் மீதி ரூபா 321,569 மில்லியனாக காணப்பட்டதுடன் அது ரூபா 233,054 மில்லியன் வங்கிக் கடன் மற்றும் ரூபா 88,515 மில்லியன் கடன் பத்திரங்களையும் கொண்டிருந்தது. 100,000 கிலோமீட்டர் வீதி செயற்திட்டம், அதிவேக வீதி நிர்மாணம், நெடுஞ்சாலைகளை விரிவுப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் அதிகாரசபையின் செயற் மூலதனத் தேவைகளுக்காக இந்தக் கடன்கள் பெறப்பட்டிருந்ததுடன் கடன்களுக்கான வட்டியானது அடிப்படை கடன் விகிதத்திற்கு 2 சதவீதம் முதல் 2.8 சதவீதம் வரையான வீதத்தைச் சேர்த்துக் கணக்கிடப்பட்டிருந்தது. இந்தக் கடன்கள் அனைத்தையும் பெறுவதற்கு திறைசேரி பிணைமுறிகள் வெளியிட்டிருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

| விடயம் | 2023 (ரூ.) | 2024 (ரூ.) | வேறுபாடு (ரூ.) | வேறுபாட்டின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| மூலதன மானியம் | 218,359,010,726 | 148,289,456,646 | 70,069,554,080 | 32.09 |
| அதிவேக வீதி தேறிய வருமானம் | 3,731,323,463 | 5,231,660,693 | 1,500,337,230 | 40.21 |
| அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவுகள் | 14,334,074,788 | 22,249,219,328 | 7,915,144,540 | 55.22 |

மீளாய்வாண்டின் மூலதன மானியங்கள் 32 சதவீதம் குறைவடைந்திருந்ததுடன் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 55.22 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் மற்றும் முந்தைய ஆண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் 1:1 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் தேறிய மிகையானது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.17 சதவீதம் குறைவடைந்துள்ளதுள்ளதுடன் அதற்கான பிரதான காரணம் மூலதன மானியங்களில் ரூ. 68,374 மில்லியன் குறைவடைந்தமை மற்றும் வட்டி வருமானம் ரூ. 535 மில்லியன் குறைவடைந்தமையாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபைக்கு சொந்தமான பிரச்சினைகள் உடனான வாகனங்கள் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு 2022 ஒக்தோபர் 03 ஆம் திகதி தொடக்கம் 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா 2.78 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ் அறிக்கை ஊடாக வழங்கப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில் லை. | வாகனச் சொத்துப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு வருவதுடன், நிதிப் பிரிவினால் பேணப்படும் சொத்துப் பதிவேட்டிற்கும் இயந்திரப் பிரிவினால் பேணப்படும் சொத்துப் பதிவேட்டிற்கும் இடையிலான ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய இணக்கப்படுத்தல்களும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | குழு அறிக்கையின் பரிந்துரைகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் விரைவாக செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பின்னதுடுவ தொடக்கம் கொட்டாவ வரையிலான பகுதி மென்மையான நிலப்பரப்பு (Soft Ground Areas) வழியாக செல்வதனால் 07 ஆண்டுகளுக்கு பிறகு Asphalt Overlaying செய்யப்பட வேண்டுமென இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் அந்த வீதி நிர்மாணிக்கப்பட்டு 13 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் அந்த பணிகள் மேற்கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கோவிட் தொற்று மற்றும் நிதி நெருக்கடி காரணமாக இந்தப் பணிகள் தாமதமடைந்து மந்தமடைந்த போதிலும் தற்போது கொட்டாவ முதல் தொடங்கொட வரையிலான பகுதிக்கு முன்னகர்வுகளை இடுவதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இந்த ஒப்பந்தம் இந்த வருட இறுதிக்குள் வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. | உரிய வீதிகளைப் பழுதுபார்த்தல் குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தற்போது பயன்படுத்தப்படும் காளாசர் முறைமை 2011 ஆம் ஆண்டில் தற்காலிகமாக நிறுவப்பட்ட ஒரு முறையாவதுடன், நவீன தொழிநுட்பத்தின் பிரகாரம், கட்டணங்கள் செலுத்தக்கூடிய மென்பொருள் அமைப்பொன்று நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அதிவேக நெடுஞ்சாலைகளிலிருந்து வெளியேறும் நுழைவாயில்கள் மூடுவதற்கும் திறப்பதற்கும் தானியங்கி பொறிமுறை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பொறிமுறையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | கொட்டாவ முதல் கடுவெல வரையான தானியங்கி வாயில் நிர்வாக அமைப்புகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. கஹதுடுவ முதல் கொடகம வரையான தானியங்கி வாயில் நிர்வாக அமைப்புகள் 2025 யூலை மாதத்தின் இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. அதன்போது, 2025 யூலை மாதத்தின் இறுதிக்குள் கடுவெல முதல் கொடகம வரையான அனைத்து பரிமாற்ற நிலையங்களிலும் தானியங்கி வாயில்கள் நிறுவப்படவுள்ளன. | நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய முறைமைகளை நிறுவுவது குறித்து கவனம் செலுத்தி, அந்தப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பந்தியின் கீழான மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காகத் தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஈ) | அதிவேக வீதி பயனர் கட்டணம் தீர்மானிப்பதற்கான நிலையான கட்டணம் கணிக்கப்பட்டிருந்தது எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டு தொகையை மீளப்பெறும் 30 வருட காலப்பகுதியில் (Target Period of Investment Recovery) மதிப்பிடப்பட்ட வருடாந்த செயற்பாட்டு செலவினம், ஆண்டினுள் அனைத்து நுழைவாயில்கள் ஊடாகவும் அதிவேக வீதிகளுக்குள் நுழையும் எதிர்பார்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையினால் வகுப்பதனால் ஆவதுடன், எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகள் மீண்டும் அறவிடும் காலத்தினுள் மொத்த கட்டுமான செலவு மற்றும் ஏற்பதற்கு நேரிடும் பராமரிப்பு செலவுகள், அக் காலப்பகுதியினுள் நுழையும் மொத்த வாகனங்கள் ஓடும் கிலோ மீட்டர்களின் எண்ணிக்கையினால் வகுப்பதனால் பெறப்படும் விகிதம் மாறி கட்டணமாக கணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொட்டாவ கடுவெல (OCH) அதிவேக நெடுஞ்சாலைக்குரிய வருடாந்த செயற்பாட்டு செலவினம் (Operation cost During the recovery Period) ரூபா 46 மில்லியன் ஆகவும் மொத்த வாகன நுழைவுகள் | அதிவேக வீதி பயனர் கட்டணம் 2023 மே மாதத்தில் திருத்தப்பட்டுள்ளது. | மிகவும் தர்க்கரீதியாக மற்றும் துல்லியமாக முதலீட்டு நிதிகள் பயனுறுதிமிக்க வகையில் ஈடுசெய்யப்படும் வகையில், நிலையான கட்டணங்களைத் தீர்மானிக்க உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 131,155,450 ஆக இருக்குமென ஊகிக்கப்பட்டதுடன், தெற்கு அதிவேக வீதிக்குரிய (கொட்டாவ தொடக்கம் மாத்தறை வரை) வருடாந்த செயற்பாட்டு செலவு ரூபா 1000 மில்லியன் எனவும் மொத்த வாகன நுழைவுகள் 974,958,800 ஆக இருக்குமென ஊகிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டில் மட்டும் இந்த அதிவேக நெடுஞ்சாலைகள் இரண்டினதும் செயற்பாட்டு செலவு ரூபா 2,220.48 மில்லியனான இருந்தது. அதன் பிரகாரம் திட்டமிடப்பட்டவாறு செயற்பாட்டு செலவு கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2019 நவம்பர் மாதம் தொடக்கம் 2024 யூலை வரையில் 04 ஆண்டுகள் 09 மாத காலப்புகுதியில் 133,840,213 நுழைவுச் சீட்டுகள் (Entry Tickets) வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 18,291,430 வாகனங்களுக்காக வெளியேறும் சீட்டுகள் (Exit Ticket) வழங்கப்பட்டிராமையின் காரணத்தினால் அக் காலப்பகுதியினுள் அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்த வாகனமொன்றிலிருந்து அறவிடப்பட்ட சராசரி கட்டணத்தை அடிப்டையில் மேற்கொள்ளப்பட்ட கணித்தல்களின் பிரகாரம், அதிகார சபையயினால் இழக்கப்பட்ட வருமானம் அண்ணவளாக ரூபா 4,614.47 மில்லியனாக காணப்படுகின்றதுடன் தினசரி வருமான இழப்பு ரூபா 01 மில்லியனுக்கு காணப்பட்டது. அதன் பிரகாரம் அதிவேக நெடுஞ்சாலைகள் வருமானம் வெவ்வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டு பிறழ் பயன்பாட்டுக்கு மற்றும் மோசடிகளுக்கு உட்பட்டிருந்த பாதிலும், பொறுப்பான கட்டணம் வசூலிப்பவர்கள் உட்பட பதவியணி இனங்காணப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் அக் குறைப்பாடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அதிவேக வீதிகள் | அதிவேக வீதி அமைப்பினுள் ஒரு நாளைக்கு சுமார் 3600 முழுமையற்ற பயணச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இதில் ஒரு நாளைக்கு 1700 முழுமையற்ற பயணச்சீட்டுகள் கெரவலப்பிட்டிய பரிமாற்ற நிலையத்திலிருந்து மாத்திரம் வழங்கப்படுகின்றன. தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில், இந்த முழுமையற்ற பயணச்சீட்டுகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் முடியவில்லை என்பதுடன், அனைத்து முழுமையற்ற பயணச்சீட்டுகளும் வருமானம் ஈட்டும் பயணச்சீட்டுகள் அல்ல. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறே, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பந்தியின் கீழான மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காகத் தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்த மற்றும் மேற்பார்வை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்வாகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 04 ஆண்டுகள் 09 மாதங்கள் காலப்பகுதியில், நுழைவாயிலில் இருந்த கட்டண வசூலிப்பவர்களினால் தங்கள் விருப்பத்தின் பிரகாரம் அல்லது கவனக்குறைவினால் வாகன வகையை (Category Change) மாற்றி 241,964 சீட்டுக்களை வழங்கியுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பங்கள் கட்டுப்படுத்த தேவையான உள்ளக கட்டுப்பாடு எதுவும் அறிமுகப்படுத்தப்படாததனால் 2019 ஆண்டு தொடக்கம் இது வரையில் அவ்வாறான பிழைகள் அறிக்கையிடப்படும் போக்கு (Trend) அதிகரித்துள்ளது. | கெலனிகம CCTV பிரிவின் மற்றும் ஒவ்வொரு பரிமாற்ற நிலையங்களிலும் உள்ள வசதிகளுக்கேற்ப CCTV கள் தோராயமாக அவதானிக்கப்படுவதுடன் வாகனப் category சரியாக இல்லாமை தொடர்பில் சம்பந்தப்பட்ட காசாளர்களுக்கு வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பந்தியின் கீழான மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காகத் தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்த மற்றும் மேற்பார்வை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | அதிவேக வீதிகள் அமைப்பு கட்டுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக ரூபா 611,374 மில்லியன் கடன் தொகை பெறப்பட்டிருந்ததுடன் அதிவேக வீதியின் சராசரி வருமாந்த நிகர இலாபம் ரூபா 3560.62 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் கடன் தொகை மட்டும் (வட்டியல்லாத) செலுத்துவதற்கு 171 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் கடக்கப்படும் என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கடன் மற்றும் வட்டி செலுத்தல் இந்த அதிவேக நெடுஞ்சாலை வருமானத்திலிருந்து ஈடுசெய்ய முடியாது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பொது மக்கள் நலன்புரி நோக்கங்களுக்காக அதிவேக வீதிகளுக்கான கட்டணங்கள் மிகக் குறைந்த கிரயத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வருமானத்திலிருந்து கடன் தவணைகள் மற்றும் வட்டியைச் செலுத்த முடியாத காரணத்தினால், பொது திறைசேரியிடமிருந்து தேவையான நிதியேற்பாடுகள் வழங்கப்படுகின்றன. | புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயற்பாட்டு செலவுகளைக் குறைப்பதற்கும் வருமானத்தை மேலும் அதிகரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பந்தியின் கீழான மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காகத் தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2009 திசெம்பர் 31 இல் ஒரு இயந்திரமொன்று ரூபா 40.62 மில்லியன் வீதம் கூட்டுத்தொகை ரூபா 365.60 மில்லியனிற்கு கொள்வனவு செய்யப்பட்ட 09 Bitumen Sprayer இயந்திரங்கள் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் தொடர்புடைய இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் காலம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 09 Sprayer இயந்திரங்கள் அதிகாரசபைக்கு சொந்தமானவையாவதுடன் அவற்றில் 02 யாழ்ப்பாணம் மற்றும் பெல்மதுளை பிரதேசங்களில் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது வீதிகளுக்கு கற்கள் பரவி தார் பூசும் செயல்முறை அவ்வளவு பிரபலமாக இல்லாததுடன் சிறிய வீதிகள் கூட கார்பட் செய்யப்படுவதால், இந்த பவுசர் வாகனங்களுக்கான தேவை இல்லாததுடன் தேவைப்படாவிட்டால் எதிர்காலத்தில் அவை கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் விளைவற்ற சொத்துக்களைப் பயன்படுத்தாவிட்டால் அவற்றை கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | சனாதிபதி செயலணியினால் ஒரு இயந்திரம் ரூபா 31.57 மில்லியன் (276,040.69USD*114.4) வீதம் 11 Aggregate Chip Spreaders இயந்திரங்கள் 2010 ஆம் ஆண்டில் ரூபா 347.37 மில்லியனிற்கு இறக்குமதி செய்யப்பட்டு அதிகாரசபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பராமரிக்கப்படுகின்ற வீதிகள தரை விரிப்பு இடப்பட்ட A மற்றும் B வகை வீதிகள் என்பதனால் இவ்வாறான வகை இயந்திரங்களின் தேவை காணப்படாத போதிலும், அவை பயன்படுத்தும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அவ் இயந்திரங்கள் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 14 ஆண்டுகள் விளைவற்று அதிகார சபை வசம் வைத்திருக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டில் ரூபா 9.36 மில்லியன் பெறுமதிக்கு கைதவிர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | இந்த 11 Aggregate Chip Spreaders இயந்திரங்கள் கற்காரை முறைமையின் கீழ் DBST வீதிகளை நிர்மாணிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அதிகாரசபையின் கீழ் உள்ள A, B பிரிவுகளின் வீதிகளுக்கு இந்த கற்காரை முறைமையைப் பயன்படுத்துவது மிக அரிதாவதுடன் அதற்கு கார்பட் இடுதல் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், மேலே குறிப்பிடப்பட்ட Aggregate Chip Spreaders இயந்திரங்களின் அகலம் 4.2 மீற்றராக இருப்பதால், அதிகாரசபை மாகாண சபைகள் அல்லது உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் பராமரிக்கப்படும் குறுகிய வீதிகளுக்கு இந்த இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாது. எனவே, இந்த இயந்திரங்களை வேறு எந்த நிறுவனத்திற்கும் மாற்றுவது பயனற்ற செயல் என்பதால், அவை கைதவிர்ப்பு செய்யப்பட்டன. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் விளைவற்ற சொத்துக்களைப் பயன்படுத்தாவிட்டால் அவற்றை கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | அதிவே வீதிகள் முகாமைத்துவ மற்றும் பராமரிப்பு பிரிவினால் கொவிட்-19 தொற்றின் போது, பாதுகாப்பு நடவடிக்கையாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2.88 மில்லியனான 33 பாதுகாப்பு அறைகள் கொவிட்-19 தொற்று நிலையின் பின்னரும், நாணயம் கணக்கிடும் 20 இயந்திரயங்கள் மற்றும் எடை அளக்கும் 05 இயந்திரங்கள் அதிகார சபையினால் கொள்வனவு செய்யப்பட்டதிலிருந்து விளைவற்று காணப்பட்டது. | கோவிட் தொற்றுநோய் முடிவடைந்துவிட்டதால், அந்த 33 கோவிட் கிருமிநாசினி அறைகள் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் தற்போது பாதுகாப்பு காவலர் அறைகள் கட்டுவதற்கும், பராமரிப்புப் பிரிவின் பராமரிப்பு வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. 20 நாணயங்கள் எண்ணும் இயந்திரங்கள் ஏலம் விடுவதற்கு முன்மொழியப்படவுள்ளன. களஞ்சியத்தில் உள்ள எடை பார்க்கும் இயந்திரங்கள் அங்கீகாரத்துடன் கைதவிர்ப்பு செய்வதற்கோ அல்லது பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படவோ எதிர்பார்க்கப்படுகின்றது. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் விளைவற்ற சொத்துக்களைப் பயன்படுத்தாவிட்டால் அவற்றை கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | 1995 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இலங்கை இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள 14 டெக்டர்கள் மற்றும் 18 ட்ரெய்லர்களின் உரித்து முறையாக கையளிப்பதற்கு அல்லது மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராதமையினால் தொடர்ந்தும் குறித்த வாகனங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கணினி அமைப்பில் காணப்படுகின்றது. | மோட்டார் வாகனங்கள் போக்குவரத்து ஆணையாளருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின்படி, அந்த வாகனங்களின் பதிவை இரத்துச் செய்வதற்கு அந்த கடிதங்கள் போதுமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட 13 டெக்டர்கள் மற்றும் 19 ட்ரெய்லர்கள் தொடர்பில் அதிகாரசபையினால் பொலிஸ் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. | குறித்த டெக்டர்கள் மற்றும் ட்ரெய்லர்கள் இராவத்திற்கு கையளிப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 40-8641 ஆம் இலக்கம் மற்றும் 26-6492 ஆம் இலக்க 02 வாகனங்கள் தொடர்பான எந்தவொரு தகவலும் அதிகார சபையினால் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் குறித்த வாகனங்கள் வெளி தரப்பினருக்கு மாற்றப்பட்டதா அல்லது தவறாக பயன்படுத்தப்பட்டதா என்பதை கண்டறிய வீதி அபிவிருத்தி அதிகார | அது தொடர்பாக பரீட்சித்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையின் வாகன கட்டுப்பாடு தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (க) | புதிய களனி பாலத்திலிருந்து அதுருகிரிய வரை தூண்களில் அமைக்கப்படும் அதிவேக வீதி செயற்திட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட 1100 அனுமதியற்ற குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குவதற்கு 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரை 05 தவணைகளில் ரூபா 2388.85 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்துவதற்கு 2021 யூலை 14 ஆம் திகதி உடன்பட்டிருந்ததுடன், குறித்த வீடுகள் கொலன்னாவ, மாளிகாவத்தை மற்றும் ஹேனமுல்ல வீட்டுத் திட்டங்கள் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2024 ஆகஸ்ட் 23 ஆம் கணக்காய்வு திகதியில் கூட்டுத்தொகை ரூபா 960 மில்லியன் தொகையை கொண்ட 02 தவணைகள் கொடுப்பனவு செய்யப்பட்டு, 03 ஆம் தவணையான ரூபா 480 மில்லியன் செலுத்த வேண்டிய போதிலும் எந்தவொரு வீடும் அதிகார சபையினால் பொறுப்பேற்பதற்கு இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வீட்டு அலகுகளில் காணப்பட்ட குறைபாடுகளைச் சரிசெய்வது குறித்து நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்கான உரிய பதில்கள் கிடைக்காத காரணத்தினால், அந்த வீடுகள் அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்படவில்லை. | ஒப்பந்தங்களின் பிரகாரம் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து வீடுகளைப் பெற்றுக்கொள்ளவும், அதிகாரசபைக்கு முறையாக வீடுகளைப் பொறுப்பேற்று, அடையாளம் காணப்பட்ட அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களுக்கு வீடுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கா) | 2011 நவம்பர் 18 ஆம் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூ. 05 மில்லியன் முற்பணம், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாமல் இருந்ததுடன் முற்பணம் வழங்கல் தொடர்பான பெறுகை குழு அறிக்கைகள், தொழில்நுட்பக் குழு அறிக்கைகள், அத்துடன் அந்த வேலையைச் செய்வதற்காக முற்பணம் வழங்கும்போது குறித்த நிறுவனம் அதிகாரசபையிடம் வைத்த பிணைமுறி பற்றிய தகவல்கள் மற்றும் குறித்த நிறுவனத்திற்கும் அதிகாரசபைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான அறிக்கைகள் எதுவும் கணக்காய்வுக்குச் | வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தெற்கு அதிவேக வீதியின் ஆரம்ப நிகழ்விற்காக, நெடுஞ்சாலைகள் அமைச்சின் அறிவுறுத்தல்களின்படி இந்தத் தொகையை முற்பணமாக வழங்கியதால், உரிய நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம், பிணைமுறி, பெறுகை குழு அறிக்கைகள் அல்லது தொழில்நுட்பக் குழு அறிக்கைகள் எதுவும் இல்லை. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்றை நடத்தித் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பந்தியின் கீழான மீளாய்வின் போது, நிதி அதிகாரப் பகிர்வு குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. | | நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (கி) | குருநாகலை முதல் தம்புள்ளை வரையான 58.6 கிலோமீற்றர் மத்திய அதிவேக வீதிப் பகுதிக்கான காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 2023 திசெம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. காணி கையகப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் 475 ஹெக்டேயர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டிருந்தது. 2023 யூன் 13 ஆம் திகதி இந்த காணிகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அந்த நேரத்தில், காணி கையகபடுத்தல் கட்டளைச் சட்டத்தின் 07 ஆம் பிரிவின்படி வெளியிடப்பட்ட மொத்த காணித் துண்டுகளின் எண்ணிக்கை 5505 இல், தனியார் காணித் துண்டுகளின் எண்ணிக்கை 3505 ஆகவும், அரசாங்கத்திற்குச் சொந்தமான காணித் துண்டுகளின் எண்ணிக்கை 1550 ஆகவும் இருந்தது.<br>3505 தனியார் காணித் துண்டுகளில், 615 துண்டுகளுக்கு கட்டளைச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின்படி உரிமை விசாரணைகள் நடத்தப்பட்டிராததுடன் உரிமை விசாரணைகள் நடத்தப்பட்ட 2890 துண்டுகளில், 469 துண்டுகளுக்கு 10(1) பிரிவின்படி அறிவித்தல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 10(1) பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்ட 2335 துண்டுகளில், 218 துண்டுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்ட 1571 துண்டுகளில், 863 துண்டுகளுக்கு 17 ஆம் பிரிவின்படி அறிவித்தல் வெளியிடப்பட்டிராததுடன் LARC குழுக்கள் நடத்தப்பட்ட 928 | காணி கையகப்படுத்தும் செயன்முறைக்கு அமைய, 615 காணித் துண்டுகளில் 351 காணித் துண்டுகள் விகாரை மற்றும் தேவாலய கட்டளைச் சட்டத்தின் கீழ் வரும் காணிகள் என்பதனால் பாதிக்கப்படும் தரப்பினருக்கு நிவாரணம் வழங்குவதற்காக அமப/21/1051/319 ஆம் இலக்க மற்றும் 2021.06.08 திகதிய அமைச்சரவை பத்திரிகைக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br>2890 காணித் துண்டுகளில் 469 துண்டுகளுக்கு 10.1 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடவும், 2335 துண்டுகளில் 218 துண்டுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>1571 துண்டுகளில் 863 துண்டுகளுக்கு 17 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன் 928 துண்டுகளில் 722 துண்டுகளுக்கான நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தப்படாமைக்கு மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களே அடிப்படையாகும். | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இது குறித்து விசாரித்து, செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் முறையான பொறிமுறையை நிறுவ வேண்டியதுடன் நிதி திரட்டும் திறன் மற்றும் முறையான சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொண்ட பின்னரே செயற்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, இது குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துண்டுகளில், 722 துண்டுகளுக்கான நட்டஈடு மற்றும் வட்டி கொடுப்பனவுகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (கீ) | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் 2024 ஆகஸ்ட் 13 திகதிய MPH/HWY/ADM/06/30/05/3 ஆம் இலக்கக் கடிதத்தின் 01 மற்றும் 03 ஆம் பிரிவுகளின்படி, கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியின் நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் முதற்கட்டமாக (ICS) மின்விளக்கு அமைப்பை மீண்டும் சீரமைப்பதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், முழு வீதியிலும் 10 கி.மீ பகுதிக்கு ரூபா 708 மில்லியன் மதிப்பீடொன்றுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தாபன விதிக்கோவையின் ii ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்றை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (கு) | கொழும்பு - கடுநாயக அதிவேக வீதி 2020 ஆம் ஆண்டு முதல் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டிருந்ததுடன் அதிவேக வீதியின் வேலிகள் மற்றும் நடுப்பகுதியில் உள்ள செப்பு கம்பிகளை வெட்டிச் செல்வது, மின்விளக்குக் கம்பங்களை வெட்டி எடுத்துச் செல்வது போன்ற திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன. 2021, 2022, 2023 ஆகிய 03 ஆண்டுகளில் பதிவான 100 திருட்டுச் சம்பவங்களில், 11 திருட்டுக்களின் பெறுமதி ரூபா 580 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டிருந்தது. பதிவான ஏனைய 89 திருட்டுச் சம்பவங்களின் பெறுமதி கண்டறியப்படவில்லை. இந்த வீதிக்கான வீதி மின்சார வயரிங் வடிவமைப்பின் போது, நடுப்பகுதியில் பதிக்கப்பட்டிருந்த மின்சார கம்பியமைப்பு, முழுமையான கொங்கிறீட் மூடியின்றி, 03 அடி அரைவட்ட விட்டம் கொண்ட ஹியூம் குழாய் (Hume Pipe) மூலம் பகுதியளவில் மூடப்பட்டிருந்ததுடன் அந்த வடிவமைப்பின்படி, அந்த மின்சார கம்பியமைப்புக்களை மிக | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்றை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலகுவாக வெட்டி அகற்றும் வாய்ப்பு இருந்தது. இந்த வடிவமைப்பு குறைபாடும் மின்சார கம்பியமைப்பும் திருட்டுக்கு ஒரு காரணமாக அமைந்திருப்பது களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.<br>முதல் திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற 2021 ஆம் ஆண்டில் பொருத்தமான பாதுகாப்பு பொறிமுறையை அறிமுகப்படுத்தாமை மற்றும் பொறுப்பான மேற்பார்வை உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமை காரணமாக, வீதியின் மின்சார கம்பியமைப்பு மற்றும் உபகரணங்கள் திருட்டுத் தொடர்ச்சியாக அதிகரிக்கக் காரணமாயிருந்தது அவதானிக்கப்பட்டது.<br>முதல் 10 கி.மீ பகுதிக்கு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில், முழு வீதிக்கான மொத்த சேதச் செலவு ரூபா 1770 மில்லியனை விட அதிகமாக இருந்தபோதிலும், அதற்கான பொறுப்பானவர்கள் இனங்காணப்பட்டு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 100,000 கி.மீ மாற்று வீதிகள், துணை வீதிகள், கிரமப்புற வீதிகளை புனரமைப்பு செய்தல் மற்றும் செயற்படுத்தல் என்ற தலைப்பில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2023 திசெம்பர் 11 திகதிய அமைச்சரவை பத்திரிக்கையின் 4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 06 மாதங்களுக்குள் வீதிகளை பாதுகாப்பான போக்குவரத்துக்கு உகந்த நிலைக்கு மேம்படுத்துவதற்கும், 2024 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 28 பில்லியன் நிதியேற்பாடு ஊடாக ரூபா 20 பில்லியன் பயன்படுத்துவதற்கும் அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன் 2024 மார்ச் 18 ஆம் திகதி நடைப்பெற்ற | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, இடைநிறுத்தப்பட்டுள்ள வீதிகளைப் புனரமைத்து போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு ஏற்ற நிலைக்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன், அங்கீகரிக்கப்படாத வீதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தமை தொடர்பில் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது தாபன விதிக்கோவையின்) II ஆம் பாகம், XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சரவை கூட்டத்தின் போது அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டின் முதல் இரு காலாண்டுகளுக்குள் நிறைவு செய்வதற்காக ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டு ஒப்பந்த கிரயம் ரூபா 562.48 மில்லியனான 28 வீதிகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன் குறித்த 100,000 கி.மீ வீதிகள் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பக்கப்படாத வீதிகளாகும். அதன் பிரகாரம், மேற்படி ஒப்பந்தத்திற்காக உடன்பட்ட பெறுமதியானது முறையான அதிகாரபூர்வமற்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து செயற்திட்ட முன்மொழிவுகளும் உரிய சாத்தியக்கூறு அறிக்கையுடன் மதிப்பீடு மற்றும் பரிந்துரைக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என 2019 திசெம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் செயற்பாடு 100,000 கிலோ மீட்டர் வீதிகள் செயற்திட்டத்தின் கீழ் 2020-2022 காலப்பகுதியினுள் 17,847 கிலோ மீட்டரிலான 13,160 வீதிகளுக்காக ரூபா 394,508.09 மதிப்பீட்டில் ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படுவதற்கு மற்றும் 2024 செப்தெம்பர் 30 இல் ரூபா 190,516.15 மில்லியன் செலவு செய்வதற்கு வரிசை அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | 100,000 கி.மீ செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், ஐந்து வருட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டதுடன், இந்த செயல்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது (2020 திசெம்பர் 14 திகதிய அமப/20/1952/319/018 ஆம் இலக்க வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்). இந்த அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய, செயற்திட்டத்திற்காக வருடாந்தம் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு எல்லைக்குள் ஒவ்வொரு வருடமும் செயற்திட்ட வேலைகள் வழங்கப்பட்டுள்ளன. | சாத்தியக்கூறு ஆய்வொன்றின் பின்னரே புதிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் நிதி திரட்டுதல் குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியில் 100,000 கிலோ மீட்டர் வீதி செயற்திட்டத்திற்காக ரூபா 215,981 மில்லியன் வருடாந்த வரவு செலவு திட்டத்தின் ஊடாக நிதயேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அக் காலப்பகுதியினுள் 17,847 கி.மீ | வருடத்தில் வழங்கப்பட்ட நிதியேற்பாடு எல்லைகளை மீறி எவ்வித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், 2022.04.26 அன்று நிதி அமைச்சினால் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் நிதி |

| | | | |
|---|---|---|---|
| | வீதிகளுக்காக ஒப்பந்தக்கார்களுடன் ரூபா 394,508 மில்லியன் ஆன உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு நிதியேற்பாட்டினை மிகைத்து நி.பி 94 இற்கு முரணாக ரூபா 178,527 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டிருந்தது. நி.பி 127 (5) பிரகாரம், மதிப்பீடுகளின் நிதியேற்பாட்டு தொகை மற்றும் செலவு இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை ஆராய்வது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பான போதிலும் வரிசை அமைச்சின் செயலாளரினால் நிறைவேற்றப்பாடு முறையற்ற வகையில் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகள் தீர்ப்பனவு செய்வதற்கு அதிக வணிக விகித கடன்கள் மற்றும் 22.5 சதவீதம் மற்றும் 20 சதவீத வட்டி விகிதங்களில் 04 ஆண்டுகளில் முதிர்ச்சியடையும் ரூபா 40,691.79 மில்லியன் பெறுமதியான திறைச்சேரி பிணைமுறிகள் திறைச்சேரியினால் வெளியிடப்பட்டிருந்தன. | வெளியிடப்பட்ட செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கான கடப்பாடுகளின் பெறுமதி ரூபா 394.508 பில்லியனிலிருந்து ரூபா 232 பில்லியனாகக் குறைக்கப்பட்டது. அவ்வாறே, 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மற்றும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரியில் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டமை 2021 ஆம் ஆண்டிலிருந்து நிலவிய நிலுவைப் பட்டியல்களை தீர்ப்பதற்காக ஆகும். | திரட்டுதல் குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 100,000 கிலோமீட்டர் வீதிகள் செயற்திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி செய்வதற்கு கிராமப்புற வீதிகளை இனங்காணப்படுவதற்கு 09 அளவுகோல்களின் கீழ் வீதிகள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு 17,648 கி.மீ வீதிகள் தெரிவு செய்யப்பட்டதற்கான தகவல்கள் பராமரிக்கப்படாததுடன் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது குறித்த அளவுகோல்களுக்கு முரணான மேல் மாகாண செயற்திட்ட அலுவலகம், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் ரூபா 1,426.67 மில்லியன் செலவிடப்பட்டு பாடசாலைகள், கோவில்கள் மற்றும் புனித இடங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு சொந்தமான உள்ளக வீதிகள் மற்றும் | 2020.02.13 திகதிய அமப/20/0142/221/005 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, செயற்திட்டத்திற்கான வீதிகளைத் தெரிவு செய்வதில் புள்ளிகள் வழங்கும் முறைமையைப் பின்பற்றுமாறும், ஆரம்பத்தில் 40 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் வீதிகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஆகும். அதற்கமைய, 100,000 கி.மீ செயற்திட்டம் அமுல்படுத்தப்படும் போது, செயற்திட்டத்திற்கான வீதிகளைத் தெரிவு செய்ய புள்ளிகள் வழங்கும் முறைமை அமுல்படுத்தப்பட்டது. 40 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற அத்தியாவசியமான மற்றும் | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாளாகங்களில் கார்பெட்டிங், கொங்கிரீட் இடுதல், பாவுக்கற்கள் பதித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த வீதிகள், அமைச்சின் செயலாளர் மற்றும் உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் நேரடி தொழிலாளர் முறையின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. | |
| (ஈ) | 100,000 கிலோ மீட்டர் வீதிகள் செயற்திட்டத்தின் பொறியியல் மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட்டிராமையின் காரணத்தினால் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 06 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்குரிய மதிப்பீட்டு பெறுமதி 2021 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 3,504 மில்லியனினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்த போதிலும் வரிசை அமைச்சின் செயலாளரின் 2022 ஒக்தோபர் 03 திகதிய MOH/SEC/GEN/2022/71 ஆம் இலக்க “ஒப்பந்த தொகையில் முன்மொழியப்பட்ட குறைப்புகள் தொடர்பாக எழுந்த சர்ச்சைகள்” தொடர்பான கடிதத்தின் பிரகாரம் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் வீதங்களை திருத்த முடியாது என தெரிவிக்கப்பட்டிருந்தமையினால் இந்த மிகை கணிப்படுகள் சீரு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் இது வரையில் சீர் செய்யப்பட்டிராததுடன் மிகை மதிப்பீட்டு வீதங்கள் திருத்தப்படாமையினால் நிர்வாக செலவுகளுக்காக மட்டும் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 2,186.14 மில்லியனினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களினதும் திருத்தப்படாத ஏனைய வீதங்கள் மிகை மதிப்பிடப்பட்டமை கருத்திற் கொள்ளப்பட்ட போது இந்த நட்டம் தொடர்ந்தும் அதிகரிக்கும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 100,000 கி.மீ செயற்திட்டத்தின் கீழ் போட்டி விலைமனு கோரல் முறைமையைப் பின்பற்றியே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. அவ்வாறே, போட்டி விலைமனு கோரல் முறைமையைப் பின்பற்றிப் பெறப்பட்ட கழிவுப் தொகையின் மூலம் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதால், பொறியியல் மதிப்பீட்டின் அடிப்படையில் இந்தக் ஒப்பந்த வழங்கல் குறித்து வரைவிலக்கணங்களை வழங்குவது நியாயமற்றது.<br><br>மேலும், 100,000 கி.மீ செயற்திட்டத்தின் ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறப்பட்ட கழிவுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 7,200 மில்லியனாவதுடன் அதன்படி ஒப்பந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கழிவுப் பணம் வேலைத்தளத்தின் நிலையைக் கருத்திற்கொண்டு ஒப்பந்தக்காரர்களினால் வழங்கப்பட்டது. இதனால், மதிப்பீட்டின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு நட்டமோ அல்லது சேதமோ ஏற்படவில்லை. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அதிகார சபைக்கு சொந்தமான அனைத்து மாகாண அலுவலகங்களிலும் 1148 பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பணி அத்தியகட்சகர்கள் இருந்த போதிலும், கடமை ஒப்படைப்பு செயன்முறை முறையாக மேற்கொள்ளப்படாமை மற்றும் பலவீனமான மேற்பார்வையின் காரணத்தினால் இறுதி ஒப்பந்த பட்டியல்களுக்கான கொடுப்பனவு நீண்டகாலம் தாமதித்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இப் பட்டியல்கள் தாமதித்தமையினால் தாமதக் கட்டணமாக ரூபா 42.89 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை 100,000 கிலோ மீட்டர் செயற்திட்டம் தொடர்பான தெரிவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | அதனால், தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட ஊழியர்களின் கீழ் பணிகளை நிறைவேற்றும் போது, பட்டியல்கள் பரிசோதனை நடவடிக்கைகளில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும், செயற்திட்டத்தை மேற்கொள்ளும் போது பணியில் இருந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படல், வெளிநாடு செல்லல், ஓய்வுபெறல் போன்ற நிகழ்வுகள் காரணமாகவும், புதிய உத்தியோகத்தர்கள் அந்தப் பட்டியல்களை பரிசோதனை செய்வதற்கு அதிக நேரம் ஒதுக்கியதாலும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 100,000 கிலோமீட்டர் செயற்திட்டம் தொடர்பாக மகநெகும வீதிகள் நிர்மாணிப்பு மற்றும் இயந்திரங்கள் கம்பனியினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட சேவை வழங்கல் ஒப்பந்தத்தின் 3(e) பிரிவின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதத்திற்கு குறையாத செயல்திறன் பிணைப்பைப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் துணை ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட பெறுமதி ரூபா 125,730 மில்லியனான 1753 வேலை கட்டளைகளில் 145 வேலை கட்டளைகளுக்கு மட்டும் பெறுமதி ரூபா 1,113 மில்லியனான செயல்திறன் பிணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் எஞ்சிய 1608 வேலை கட்டளைகளுக்காக கம்பனியினால் எந்தவொரு செயல்திறன் பிணையும் பெற்றுக் கொள்ளப்படாது வேலைகள் ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. | மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரணங்கள் (தனியார்) கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட சேவைகள் வழங்கல் ஒப்பந்தங்கள் குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிந்திருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2025 பெப்ரவரி 28 ஆம் திகதி முற்பணம் அறவிடப்படும் போது ரூபா 16,785 மில்லியன் இடைக்கால கொடுப்பனவு பட்டியல்கள் ஊடாகவும், ரூபா 2,812 மில்லியன் ஒப்பந்தக்காரர்களின் ஏனைய ஒப்பந்தங்களுக்காக செலுத்த வேண்டிய பட்டியல்கள் ஊடாக தீர்பனவு செய்வதற்கு மற்றும் ரூபா 26 மில்லியன் வேலை முற்பண பிணைமுறி ஊடாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 2,812 மில்லியன் ஒப்பந்தக்காரர்களின் பிற பட்டியல்கள் ஊடாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அறவிடப்பட வேண்டியுள்ள எஞ்சிய முற்பணத் தொகையை அந்த ஒப்பந்த கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட வேறு ஒப்பந்தங்கள் மூலம் ஈடுசெய்வதற்கான உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஏ) | 79/2023 ஆம் இலக்க மற்றும் 2023 திசெம்பர் 11 திகதிய அமைச்சரவை பத்திரிக்கை பிரகாரம் இடைநடுவே நிறுத்தப்பட்ட வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 28 பில்லியன் தொகை மீண்டும் திருத்தப்பட்டு அந் நிதியேற்பாட்டு பெறுமதியில் ரூபா 20 பில்லியன் 1500 கி.மீ வீதிகள் மேம்பாட்டு திட்டத்திற்கு ஒதுக்குவதற்கு நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் அவதானிப்புகளுக்கு உட்பட்டு செயல்படுத்துவதற்கு 2024 சனவரி 25 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் புதிண வீதிகள் இந்த வேலைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்படக் கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக அதிகார சபைக்கு சொந்தமற்ற 973.5 கி.மீ புதிய வீதிகள் அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் 11 ஆம் திகதிய 79/2023 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கமைய, 100,000 கி.மீ செயற்திட்டத்தின் மூலம் செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைப் பட்டியல்களை தீர்ப்பதற்காக ரூபா 08 பில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை உரிய பணிகளுக்காகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | அதிகார சபையின் விடயப் பரப்பிற்கு சொந்தமற்ற கிண்ணியா-குறுஞ்சாங்கேணி வீதியின் 01 ஆம் இலக்க பாலம் (குறுஞ்சாங்கேணிப் பாலம்) 100,000 கிலோமீட்டர் வீதிகள் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 227.7 மில்லியனிற்கு வழங்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 25 இல் 25 சதவீத பௌதீக செயன் முன்னேற்றத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 60.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2024 சனவரி 31 இல் தற்காலிக இரும்பு பாலமொன்று நிர்மாணித்து போக்குவரத்து வசதிக்காக இந்த செயற்திட்டத்தின் கீழ் மற்றும் அதிகார சபையின் RMT நிதியத்தின் ஊடாக கூட்டுத்தொகை 13.504 மில்லியனான கிரயமொன்றும் ஏற்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அதிகார சபையின் விடயப் பரப்பிற்கு முரணாக இந்த பாலம் மற்றும் மாற்று போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ஏற்கப்பட்ட ரூபா 74.104 மில்லியன் பெறுமதி அங்கீகாரமின்றி ஏற்கப்பட்ட செலவாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 100,000 கி.மீ வீதித் செயற்திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுக்குள், செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தின் (Activity Budget) கீழ், கிண்ணியா - குருஞ்சாங்கேணி வீதியில் உள்ள பாலம் இல. 01 (குருஞ்சாங்கேணி பாலம்) நிர்மாணிப்பதற்காக, நிர்மாணப் பிரிவினால் ஒப்பந்தம் வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் விடயபரப்பிற்கு உட்படாத வீதிகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது, ஒப்பந்த முகாமைத்துவம் குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஒ) | 100,000 கிலோமீட்டர் வீதிகள் செயற்திட்டத்தின் கீழ் 09 மாகாணங்களின் 29 ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 245.8 மில்லியன் வேலை முற்பணத்திற்கு ஒப்பந்தக்காரர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட பிணைமுறிகள் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் காலாவதியாகி இருந்தபோதிலும் இந்த காலாவதியான முற்பணப் பிணைப் பத்திரங்களின் காலாவதிக்கு முன்னர் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையின் காரணத்தினால் குறித்த முற்பணம் அறவிடப்படும் அபாயம் இருந்த போதிலும், அதற்குரிய இழப்பீட்டை ஒதுக்குவதற்கு அல்லது பெறுபேற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கப்பட்ட முற்பணங்களுக்கு ஈடாக வழங்கப்பட்ட முற்பணப் பிணைகள் நாளதுவரையாக்கப்பட்டன. காலாவதியான முற்பணப் பிணைகளை நீடிக்குமாறும், அவ்வாறு செய்யாவிட்டால் அந்தப் பெறுமதியை பணமாக அதிகாரசபையிடம் ஒப்படைக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. முற்பணப் பிணைகள் காலாவதியாவதற்கு முன்னர் உரிய மாகாண அலுவலகத் தலைவர்களினால் (மாகாணப் பொறுப்புப் பணிப்பாளர்/ பிரதம பொறியியலாளர்) இந்தப் பிணைகளின் காலத்தை நீடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால், அந்த நேரத்தில் நாட்டில் நிலவிய கோவிட் 19 மற்றும் நிதி நெருக்கடி காரணமாக, | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முற்பணப் பிணைகளை வழங்கிய நிதி நிறுவனங்கள் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. | |
| (ஓ) | 100,000 கி.மீ வீதித் செயற்திட்டம் ஊடாக ஒப்பந்தப் தொகுதிகளுக்கான பொறியியல் மதிப்பீட்டுச் செலவுடன் 20 சதவீதத்தை மேலதிகமாகச் சேர்த்து, அந்தப் பெறுமதியின் மீது 4.2 சதவீத நிர்வாகச் செலவையும், 10 சதவீத எதிர்பாராத செலவுகளுக்கான சதவீதத்தையும் சேர்த்து, செலவுடன் 30 சதவீதத்திற்கும் அதிகமான பெறுமதியைச் சேர்த்து, ஏலதாரருக்கு சமர்ப்பித்து, அதற்காக ஆகக்கூடிய கழிவைப் பெறும் முறை பின்பற்றப்பட்டிருந்தது.<br>அதன்படி, தெரிவு செய்யப்பட்ட 24 ஒப்பந்தப் தொகுதிகளுக்காக உரிய ஏலதாரர்களால் வழங்கப்பட்ட கழிவின் அளவு 0.19 சதவீதத்திலிருந்து 13.56 சதவீதம் வரையான மிகக் குறைந்த வீச்சிலேயே காணப்பட்டது. உரிய பொறியியல் மதிப்பீடுகளைப் பகிரங்கப்படுத்தாமல் விலைமனுக்கள் மூலம் ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்திருந்தால், கழிவுகள் மூலம் அதிகாரசபைக்குக் கிடைத்த நலனை விட அதிக நலன் நிலையை அடைந்திருக்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டது.<br>தெரிவு செய்யப்பட்ட 11 தொகுதிகளின் பொறியியல் மதிப்பீடுகளைக் கருத்திற் கொள்ளும்போது, மொத்த இலாபத்தில் 12 சதவீதம் அதாவது ரூபா 11.47 மில்லியன் கழிவாக அதிகாரசபைக்குக் கிடைத்த போது, 88 சதவீதம் அதாவது ரூபா 83.13 மில்லியன் இலாபத்தை ஒப்பந்தக்காரர்கள் ஈட்டுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. | 100,000 கி.மீ செயற்திட்டத்திற்கான பொறியியல் மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது HSR கட்டணங்களுடன் 20% பொது மேலதிகச் செலவுகள் மற்றும் இலாபப் பங்கீடுகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்டுள்ளன.<br>இந்த ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்களை வழங்குவதற்கான ஒரு நிலையான முறையாகிய Lump Sum முறையின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.<br>இதன்போது, எப்போதும் பொறியியல் மதிப்பீட்டை விடக் குறைந்த பெறுமதிக்கே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.<br>அளவீடு செய்து கொடுப்பனவு செய்யும் (Measure and Pay) முறையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களை, பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதியை விட அதிக பெறுமதிகளுக்கு வழங்குவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகும்.<br>எவ்வாறாயினும், 100,000 கி.மீ திட்டத்தின் கீழ் கழிவுகள் வழங்கப்பட்டதால், பொறியியல் மதிப்பீட்டை விடக் குறைந்த பெறுமதிக்கே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் முறைமையினால், பெறுகை நிறுவகத்திற்கு பொதுவாகக் கிடைக்கும் நலனை விட அதிக நலனான நிலைமை காணப்படுகிறது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழ் உள்ள மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | ரூபா 50 மில்லியனிற்கு குறைவான பெறுமதியான ஒப்பந்தப் தொகுதிகளில் நிலக்கீல் இடுவதற்காக வேறொரு ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்கமைய, 22 மாவட்டங்களில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களில், ABC இடுதல் 100% பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், நிலக்கீல் இடும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வீதிகள் தொடர்பில் 2024 செப்டம்பர் 30 திகதியன்று பௌதீக முன்னேற்றம் 80% இற்கும் குறைவாகப் பதிவாகியிருந்த 405 வீதிகள் காணப்பட்டதுடன் அவற்றின் மொத்த தூரம் 591.03 கி.மீ ஆக இருந்தது.<br>அதன் பிரகாரம், ABC இடுதல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த வீதி நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாததால் அந்த வீதிகள் சேதமடைந்து, முதல் கட்டத்தின் கீழ் ABC 100% பூரணமாக இடுவதற்குச் செலவிடப்பட்ட செலவானது விளைவற்ற செலவுகளாக மாறுவது அவதானிக்கப்பட்டது. | ரூபா 50 மில்லியனிற்கு குறைவான பெறுமதியான ஒப்பந்தப் தொகுதிகளுக்கான நிலக்கீல்இடும் பணிகளை வேறொரு ஒப்பந்தக்காரர் மூலம் மேற்கொள்ள திட்டத்தின் ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் அதனுடன் இணைந்த நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட மூலப்பொருட்கள் பற்றாக்குறை, சில மூலப்பொருட்களின் விலையேற்றம் போன்ற காரணிகளால், திட்டங்களுக்குத் தேவையான நிலக்கீல் விநியோகத்தை மேற்கொள்ள முடியாமை மற்றும் உரிய காலப்பகுதிக்குள் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமை போன்ற காரணங்களால், செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை ஆரம்பத்தில் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளது. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இது குறித்து விசாரணையொன்று நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (க) | வரிசை அமைச்சு 2025 ஏப்ரல் 04 ஆம் திகதி நடைத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டக் குறிப்பு இலக்கம் 03 (iii) இன் படி, 100,000 கி.மீ செயற்திட்டத்தின் கீழ் 34 ஒப்பந்தங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 340.20 மில்லியன் பெறுமதியான வேலை முற்பணத்தை அறவிட அதிகாரசபையின் சட்டப் பிரிவு ஊடாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2025 மே 02 ஆம் திகதி வரையிலும் சட்டப் பிரிவிடம் தேவையான தகவல்கள் இல்லை என்றும், அவ்வாறான சட்ட நடவடிக்கைகள் | 100,000 கி.மீ செயற்திட்டத்தின் வேலை முற்பணமாக அறவிடப்பட வேண்டிய எஞ்சிய தொகைக்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>ஒப்பந்தங்கள் தொடர்பான எஞ்சிய முற்பணம் தொகையைக் குறைப்பதற்காக, ஒப்பந்தக்காரர்களுக்கு வேலைகளை வழங்கி அந்தப் பணத்தைக் குறைத்துக்கொள்வது குறித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | குறித்த முற்பணம் தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்படல் வேண்டும். |

எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (சட்டம்) அவர்கள் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதிய RDA/LD/LBF&RRP ஆம் இலக்கக் கடிதம் ஊடாக கணக்காய்வுக்கு அறிவித்துள்ளார். அதன்படி, வேலை முற்பணத்தை அறவிடுவதில் ஆபத்து நிலைமை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 நவம்பர் 12 இல் உள்ளவாறு தெற்கு மாகாணத்தினுள் 07 பதவிகளில் 215 உத்தியோகத்தர்களும், 05 பதவிகளில் 18 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களும் நிலவிய போதிலும் மேலதிக உத்தியோகத்தர்கள் பிற இடங்களுக்கு இடம் மாற்றம் செய்வதற்கு/ இணைப்பதற்கு அல்லது வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையினால் மனிதவளம் வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக பயன்படுத்தப்பட்டிராமையினால் மேதலதிக உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் விளைவற்ற செலவென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2025 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றங்களின் கீழ், தென் மாகாணத்தில் உள்ள மேலதிக உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் வெற்றிடங்கள் நிலவும் அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்போது, 5 வருடங்களுக்கும் மேலாக ஒரே சேவை நிலையத்தில் சேவைக் காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் சேவைத் தேவையையும் கருத்திற்கொண்டு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பேணுவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பந்தியின் கீழான மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஆ) | 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறுவப்பட்ட சட்டத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு பணிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்பான வீதி நிர்மாணம், சொத்துக்கள் செயற்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக மாகாண பணிப்பாளர் அலுவலகங்கள், பிரதான பொறியியலாளர் அலுவலகங்கள், நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச பணி அலகுகள் நிறுவப்பட்டு அவ் அலகுகளுக்கு தேவையான உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ள போது, பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி | அரசாங்கத்தினால் அவ்வப்போது ஆரம்பிக்கப்பட்ட புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காகவும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறுவன நடவடிக்கைகளைச் சீராகப் பேணுவதற்காகவும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அலுவலகங்களின் தேவைக்கேற்ப அந்த அலுவலகங்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் செயற்திட்டங்களுக்காக அதிகாரசபையின் ஊழியர்களை விடுவிப்பது தொடர்பில், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழான மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை |

| | | | |
|---|---|---|---|
| | மேல் மாகாண செயற்திட்ட அலுவலகம், தெற்கு மாகாணத்தின் மேலதிக பணிப்பாளர் கட்டுமான அலுவலகம், வடமேல் மாகாண பிரதான பொறியியலாளர் செயற்திட்ட அலுவலகம் மற்றும் சபரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் பிரதான பொறியியலாளர் செயற்திட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டு அவ் அவுலவகங்களுக்காக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 91, 85 மற்றும் 81 ஊழியர்கள் இணைக்கப்பட்டு அவ் ஆண்டுகளில் ஊழியர் சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், வாகன வாடகை உட்பட பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு செலவுகளுக்காக முறையே ரூபா 213.96 மில்லியன், 186.073 மில்லியன் மற்றும் 120.613 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | அதிகாரசபையினுள் நிலவும் பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியிலிருந்து சேவைத் தேவைக்கேற்ப வரிசை அமைச்சின் மற்றும் செயற்திட்டத் தலைவர்களின் கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு ஆகக்குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களை அந்தத் செயற்திட்டங்களுக்கு இணைக்க இந்த அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. | செய்தல் வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஆகஸ்ட் 01 திகதிய 36 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் மட்டும் ஊழியர் ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அதிகார சபையினால் ஊழியர் ஆட்சேர்ப்பு மேற்கொண்டமையினால் மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாரான பதவியணி முறையே 9474 மற்றும் 9274 ஆகவும் காணப்பட்டமையினால் ஊழியர் அதிகரிப்பு 477 ஆகவும் பற்றாக்குறை 677 ஆகவும் காணப்பட்டது. இந்த மிகை ஊழியர்களில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட சேவை காலத்திற்கு மத்திய அதிவேக வீதியின் 2 ஆம் கட்ட நடவடிக்கைகளுக்காக 105 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2023 மார்ச் 22 ஆம் | மத்திய அதிவேக வீதியின் 2 ஆம் கட்டத்தின் செயற்பாடுகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2023 மார்ச் 22 ஆம் திகதி அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கிடைத்திருந்த போதிலும், அந்தத் திணைக்களத்தின் DMS/7777/CEP ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அவர்களின் ஒப்பந்த சேவைக் காலம் நீடிக்கப்படவில்லை. ஆயினும், அந்த 105 ஊழியர்களின் சேவைக் காலம் பணிப்பாளர் சபை பத்திர இல. 2523/2023 இற்கமைய நீடிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணையொன்றை நடத்தி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பு செய்தது தொடர்பில் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழ் உள்ள மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த ஒப்பந்தக் காலம் 2024 மார்ச் 21 ஆம் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும், அக் காலம் நீடிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு அல்லது சேவைகள் தேவைப்படாத ஊழியர்களின் ஒப்பந்தக் காலம் முடிவுறுத்தப்படுவதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஊடாக பதவிகள் மற்றும் சம்பள அளவீடுகள் அங்கீகரித்துக் கொள்ளப்படாத 07 பதவிகளுக்காக 19 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 14.04 மில்லியன் மீளாய்வாண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சேவைத் தேவையினால் அப்போது இருந்த ஊழியர்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால், தேவையான சந்தர்ப்பங்களில் அப்போது இருந்த முகாமைத்துவத்தினால் அந்தந்தப் பதவிகளுக்காக ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். | தாபன விதிக்கோவையின் II ஆம் பாகம், XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணையொன்றை நடத்தி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பு செய்தது தொடர்பில் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழ் உள்ள மீளாய்வின் போது, இத்துறை குறித்து விசேட கவனம் செலுத்தி, தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகார சபைக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட அதிவேக வீதிகள் போக்குவரத்து (தனியார்) கம்பனி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மகநெகும நிர்மாணிப்பு மற்றும் இயந்திரங்கள் கம்பனியின் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு இன்றி சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிரயாரம் மறுக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பாதுகாப்பான கணக்காய்வு அபிப்பிராயம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 20 திகதிய CP/23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு சொந்தமான 04 துணைக் கம்பனிகள் கலைப்பதற்கு தீரமானிக்கப்பட்டிருந்தமையினால் தொடர்புடைய கம்பனிகளின் தொடர்ந்து இயங்கும் நிலைமையும் நிச்சயமற்று காணப்பட்டது. | உடன்படுகின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் கீழ் உள்ள மீளாய்வின் போது, துணை கம்பனிகள் குறித்து விசேட கவனம் செலுத்தி, அந்த கம்பனிகளின் தொடர்ந்தியங்கும் நிலை நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல் தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையக் கூடிய வகையில் வேலைத்திட்டமொன்று வெளிப்படுத்தப்படாததுடன் அதிகார சபையினால் இனங்காணப்பட்ட நிலைப்பேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் என்னவென்றும், அதற்கு தொடர்பான சிலையான அபிவிருத்தி குறிக்காட்டிகள் (SDG | வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்காக நிலைபேறான அபிவிருத்தி சபையிடம் வழங்கப்பட வேண்டிய குறிக்காட்டிகள் 2023 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளன. அந்த இலக்குகள் மற்றும் குறிக்காட்டிகள் நாளதுவரையாக்கப்பட்டன. 11.2 மற்றும் 9.1 ஆகியன நாளதுவரையாக்கப்பட்ட இலக்குகளாகும். அனைத்து செயறத்திட்டத்தின் ஊடாகவும் அவ் இலக்குகள் | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன், 2030 ஆண்டு வரை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்படுதல் வேண்டும். |

Indicators) மற்றும் ஆண்டினுள் அக் குறிக்காட்டிகளின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் போன்ற அளவுகோல்கள் வருடர்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2030 ஆண்டு வரை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிலைபேறான இலக்குகள் என்ன என்றும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

அடையப்படுகின்றதுடன், நிலைபேறான அபிவிருத்தி இலக்கிற்கான பிரிவின் ஊடாக அதற்குரிய தரவுகள் வருடாந்தம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.